அரசர்களுக்கு நடுவில் உட்கார்ந்திருந்தார். ஆனுல் அவருடைய முகத்தைப் பார்ப்பவர்கள் பயந்து நடுங்கும்படி பகவான் கோரமாய் மாற்றிவிட்டார். மஹாதேவருடைய ப்ரதமகணங்களில் இருவர் இந்த ரஹஸ்யத்தையறிந்து, ப்ராஹ்மணவேஷத்துடன் அங்கேசென்று நாரதருடைய காதில் விழும்படியாய், "ஹா! ஹா! இந்தத் தேவர்ஷி ஒருநாளுமில்லாத அழகையும் தேஜஸையும் காந்தியையும் இன்று அடைந்திருக்கிறார். இப்படியல்லவோ ஜன்மமெடுக்கவேண்டு"மென்று, பலவிதமாய் ஸ்தோத்ரஞ்செய்தார்கள். நாரதர் அதை நிஜமென்று நம்பி, அந்த ராஜகன்யை தனக்கு மாலையிடுவாளென்று ப்ரதிநிமிஷமும் எதிர்பார்த்திருந்தார். அப்பொழுது அந்தப் பெண் அவருடைய ஸமீபத்தில் வந்து, அவரைக்கண்டு பயந்து, கோவென்றலறிக்கொண்டு, வெளியில் ஓடுகையில், ஒரு மஹாபுருஷன் எதிரில் வரக்கண்டு, அவருடைய கழுத்தில் மாலையைப்போட்டாள். நாரதர் கடுங்கோபங்கொண்டார். அதைக்கண்டு அவ்விரு ப்ராஹ்மணர்களும் ஸமீபத்தில் வந்து, "ஸ்வாமீ! எங்கேயாவது சென்று ஒரு கண்ணாடியை ஸம்பாதித்துத் தங்களுடைய முகத்தின் அழகைப் பார்த்துக்கொள்ளுங்கள். இவ்வளவு ஸுந்தரமான தங்களை அந்தப் பெண் எப்படி வேண்டாமென்று சொன்னளோ"வென்று கோபம் தலைக்குவரும்படி செய்தார்கள். நாரதர் ஜலத்தில் தன் ப்ரதிபிம்பத்தைப் பார்த்து, நடந்த விஷயத்தையறிந்துகொண்டு, தன்னைப் பரிஹாஸஞ்செய்த இரண்டு ப்ராஹ்மணர்களும் ஸமீபத்திலிருந்தபடியால, "ஓ! துஷ்டர்களே! நீங்கள் ப்ராஹ்மணர்களாயிருந்தும் ராக்ஷஸதர்மத்தையனுஸரித்து, இரக்கமில்லாமல், என்னைக் கேலிசெய்தபடியால், ராக்ஷஸர்களாகவே பிறக்கக்கடவீர்களெ"ன்று சபித்தார்.

பிறகு வைகுண்டத்திற்குச் சென்று, வழியில் மஹாவிஷ்ணு விச்வமோஹினியையும் கண்டு, நடந்ததெல்லாம் அவருடைய மாயையென்றறியாமல், அவரிடத்தில் கோபவெறிகொண்டு "ஓய்! மஹாவிஷ்ணுவே! உமக்கு இவ்வளவு பொறாமையும் வஞ்சனையும் கூடாது. உமக்கு இந்தப் பெண் வேண்டுமென்றிருந்தால் என்முகத்தைக்கோரமாய்ச் செய்யவேண்டுமோ? எல்லோரும் என்னை பரிஹாஸஞ்செய்வதில் உமக்கு லாபமென்ன? உமது கபடமெல்லாம் என்னிடத்தில் செல்லுமா? எந்த ரூபத்தையெடுத்து இவளை மயக்கி விவாஹஞ்செய்தீரோ, அந்த ரூபத்துடன் பூலோகத்தில் பிறக்கக்

கடவீர். எனக்குக் குரங்கு முகத்தைக் கொடுத்ததற்காக, நீர் குரங்குகளைப் ப்ரார்த்தித்து, அவைகளின் ஸஹாயத்தால் உமது உத்தேசத்தை நிறைவேற்றிக்கொள்வீர். எனக்குக் கிடைக்கும் பார்யையை நீர் அபஹரித்தபடியால், உமக்குக் கிடைத்த பார்யையை உமது சத்ருவான ஒரு ராக்ஷஸன் அபஹரிப்பானெ"ன்று சபித்தார். பகவான் புன்சிரிப்புடன் அந்தச் சாபத்தை ஏற்றுக்கொண்டார். பிறகு சிவனுடைய அவ்விரண்டு ப்ரதமகணங்களைப்பார்த்து, "ப்ராஹ்மணனையும் ரிஷியாயுமிருக்கும் என்னை அலக்ஷ்யஞ்செய்து அவமானப்படுத்தினதற்காக நீங்கள் ராக்ஷஸஜன்மத்தை அடையக்கடவீர்கள். விஷ்ணுவின் கையால் மரணமடைந்து, சாபத்திலிருந்து விடுபடுவீர்களெ"ன்றார். —ராமசரித்ரமானஸம், பாலகாண்டம்.

ஸ்வாயம்புவமனுவும் அவருடைய பத்னி சதரூபையும் கோமதீநதிக்கரையில், அநேக ஆயிரவர்ஷங்களாய்த் தபஸ்செய்தார்கள். மஹாவிஷ்ணு அவர்களுக்கு ப்ரத்யக்ஷமாய், "உங்களுக்கென்ன வரம்வேண்டுமெ"ன்று கேட்க, "ராமமூர்த்தியின் நிஜஸ்வரூபத்தைப் பார்க்கவேண்டுமெ"ன்றார்கள். பகவான், "நீங்கள் இன்னுமொரு வரம் கேளுங்களெ"ன்று சொல்ல, "தங்களைப்போல் புத்ரன் பிறக்கவேண்டுமெ"ன்றார்கள். "நானே உங்களுக்குப் புத்ரனாய்ப் பிறக்கிறேனெ"ன்றார். அந்த மனுவே தசரதர்.—ஷை

ஸத்யகேதுவென்ற கேகயதேசத்தரசனுக்கு ப்ரதாபபானுவென்றும், அரிமர்த்தனனென்றும் இரண்டு புத்ரர்களுண்டு. அவர்களில் ப்ரதாபபானு தன் தகப்பனுக்குப் பிற்காலத்தில் அரசனாய், ப்ரஜைகளை ஆண்டுவந்தான். ஒருநாள் காட்டில் வேட்டையாடுகையில், ஓர் காட்டுப்பன்றியைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் போய், வழிதெரியாமல், ஸூர்யாஸ்தமனஸமயத்தில் ஓர் ஸந்யாஸியைக் கண்டான். அவன் அவ்வரசனைத் தன் ஆச்ரமத்தில் வைத்து அன்றிராத்ரி நன்றாயுபசரித்தான். அரசன், "ஸ்வாமி! தங்களுடைய பெயரென்ன? இந்த நிர்மானுஷ்யமான வனத்தில் தாங்கள் வந்திருக்கக் காரணமென்ன?"வென்று கேட்டான். வெகுகாலத்திற்குமுன் ஓரரசன் ப்ரதாபபானுவால் ஜயிக்கப்பட்டு, ராஜ்யத்தை விட்டோடிக், காட்டில் அடைந்துகொண்டிருந்தான். இந்த ஸந்யாஸி அவனே. பழிதீர்த்துக்கொள்ள நல்ல ஸமயம் வாய்த்ததென்று ஸந்தோஷப்பட்டு, "மஹாராஜ! என்பெயர் ஏகதனு. இந்த ப்ரபஞ்ச ஸிருஷ்டியான காலம்முதல் என் தபோபலத்தால் இதே தே

ஹமத்திலிருந்துவருகிறேனெ"ன்றான். ப்ரதாபபானு ஸந்யாஸியின்
வார்த்தையால் மயங்கி, அவனிடத்தில் அளவற்ற பக்திவைத்து,
"ஸ்வாமீ! எனக்குத் தீர்க்காயுஸும் ஐச்வர்யமும் ஜயமும் அதி
காரமும் கிடைக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமெ"ன்று ஸாஷ்
டாங்கமாய் நமஸ்கரித்து ப்ரார்த்தித்தான். அதற்கு அந்த ஸந்
யாஸி நெடுநேரம் ஆலோசனைசெய்வதுபோல் அபிநயித்துப்
பிறகு, "நீ ஒருபொழுதும் ப்ராஹ்மணர்களை அவமானஞ்செய்யக்
கூடாது. நம்மிருவர்க்கும் நடந்த ஸம்பாஷணையை யாரும் அறி
யக்கூடாது. இதற்கு ஸம்மதித்தால் உன்னிஷ்டத்தை நிறை
வேற்றுகிறேனெ"ன்றான். அரசன் அப்படியே ப்ரதிக்ஞை
செய்து, "ஸ்வாமீ! ப்ராஹ்மணர்களுடைய தயவை நான் ஸம்பா
திப்பதற்கு வழியென்னவெ"ன்று கேட்க, அந்த வஞ்சகன், "ஒரு
வர்ஷம்வரையில் ப்ரதிதினமும் லக்ஷப்ராஹ்மணபோஜனம் செய்
வதாய எல்லோர்க்கும் தெரியப்படுத்து. அவர்களுக்குப் பரிமா
றும் பதார்த்தங்களை நானே பக்வஞ்செய்கிறேன். என்கையால்
தொடப்பட்ட பதார்த்தங்களைப் புஜிக்கிறவர்களெல்லோரும் உனக்
குக் கட்டுப்படுவார்கள். இப்படி உன் ராஜ்யத்திலுள்ள ப்ராஹ்
மணர்களெல்லோரும் ஒரு வர்ஷத்துக்குள் உனக்கு வசப்படுவார்
கள். அவர்களால் தேவர்களும் வசப்படுவார்கள். இதற்கு
உன் புரோஹிதர் ஸம்மதிக்கமாட்டாராகையால், அவரை இங்கே
யெடுத்துவந்து, நமது காரியம் முடியும்வரையில் மறைத்துவைக்கி
றேன். ஒரு க்ஷணத்தில் உன்னையும் உன் குதிரையையும் இங்கி
ருந்து, உன் அரண்மனையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். இன்
றைக்கு மூன்றாவது தினத்தில், நான் அங்கே வருவேன். என்னை இன்
னானென்று நீ அறியும்படி ஓர் அடையாளஞ்சொல்லுகிறேனெ"ன்
றான். அரசன் பரமானந்தபரவசனாய்த் தனக்கு ஸகல மனோரதங்
களும் கைகூடினவென்று மகிழ்ந்து, கவலையற்று அயர்ந்து நித்ரை
செய்தான்.

அப்பொழுது அந்த ஸந்யாஸியின் மித்ரனான காலகேதுவெ
ன்ற ஓர் ராக்ஷஸன் அங்கே வந்தான். அவனுக்குப் பத்து ஸஹோ
தரர்களும் நூறு புத்ரர்களுமிருந்தார்கள். அவர்களை ப்ரதாபபானு
யுத்தத்தில் கொன்றான். ஆகையால் எப்பொழுது பழிதீர்த்துக்
கொள்வோமென்று ஸமயம்பார்த்திருந்தான். தன் சத்ரு இப்பொ
ழுது தன் வசத்தில் அகப்பட்டதைப்பற்றி ஸந்யாஸி ஸந்தோஷ

மடைந்து, காலகேதுவின் ஸஹாயத்தால் அரசனையும் அவனுடைய குதிரையையும் அரண்மனையில் கொண்டுபோய்விட்டுப், புரோஹிதரைத் தன் ஆச்ரமத்தில் மறைத்து வைத்து, அவருடைய ஸ்தானத்தில் தான் இருந்தான். மறுநாட்காலையில அரசன் விழித்துக்கொண்டு, தான் அரண்மனையிலிருப்பதைக் கண்டு, அளவற்ற ஆச்சர்யமடைந்தான். மூன்றுவதுநாளில் புரோஹித வேஷந்தரித்த ஸன்யாஸி அரசனுக்குக் குறிப்பிட்ட அடையாளத்தைக் காட்டித் தான் இன்னுனென்று தெரிவித்தான். அரசன் ஒரு வர்ஷம்வரையில் லக்ஷம் ப்ராஹ்மணர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் போஜனம்போடுவதாய் ராஜ்யமெங்கும் பறை சாற்றுவித்தான். அப்படியே ப்ராஹ்மணர்கள் குடும்பங்களுடன் வந்து, போஜனஞ்செய்ய உட்கார்ந்தார்கள். அதற்குள் சமையற்காரனுடைய வேஷந்தரித்த காலகேதுவென்ற ராக்ஷஸன், ப்ராஹ்மணர்களுடைய மாம்ஸத்தை அன்னத்துடன் கலந்து சமைத்திருந்தான். அதைப் பரிமாறினவுடன் ஆகாசவாணி அந்தக் கபடத்தை எல்லோர்க்கும் வெளிப்படுத்தி, போஜனஞ்செய்யாமல் தடுத்தது. அதைக்கேட்ட ப்ராஹ்மணர்கள் அரசனைப்பார்த்து, "நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் நாசமடைந்து ராக்ஷஸர்களாகக் கடவீர்களே" என்று சபித்தார்கள். அப்பொழுது ஆகாசவாணி, "அரசனிடத்தில் தோஷமில்லை. நீங்கள் சபித்தது ந்யாயமல்லவே" என்றது. அரசன் சமையலறைக்குள் போய்ப் பார்க்கையில், சமையற்காரனையாவது அன்னத்தையாவது காணவில்லை.

ப்ராஹ்மணர்களுடைய சாபத்தின்படி, அநேக சத்ருக்கள் அரசனையெதிர்த்து, அவனுடைய ராஜ்யத்தை ஜயித்து, அந்த வம்சத்தையே வேரறுத்தார்கள். பிறகு ப்ரதாபபானு ராவணனாகவும், அவனுடைய தம்பி அரிமர்த்தனன் கும்பகர்ணனாகவும், அவர்களுடைய மந்த்ரி தர்மருசியென்பவன் விபீஷணனாகவும் ஜன்மமெடுத்தார்கள்—ராமசரித்ரமானஸம், பாலகாண்டம்

முன்காலத்தில் காச்யபப்ரஜாபதியும அதிதியும் பகவானைக் குறித்துக் கடுந்தபஸ்செய்தார்கள். வாஸுதேவன் அவர்களுக்கு ப்ரத்யக்ஷமாய், "என்ன வரம் வேண்டும்" என்றுகேட்க, "தங்களையே புத்ரனாக அடையவேண்டும்" என்றார்கள். அப்படியே அவர்கள் தசரதராயும் கௌஸல்யையாயும், வாஸுதேவன் ராமனாயும்,

அவருடைய மஹாமாயை ஸீதையாயும் அவதரித்தார்கள்—அத்யாத்மராமாயணம். II.

முன்னொருகாலத்தில் அஸுரர்கள் தேவர்களால் அபஜயமடைந்து சுக்ராசார்யரைச் சரணமடைந்தார்கள். அவர், "ப்ருஹஸ்பதியிடத்தில் இல்லாத வித்யைகளை நான் பரமசிவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டுவருகிறேன். அதுவரையில் நீங்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டுத் தபஸ்செய்யுங்கள். அப்பொழுது தேவர்கள் உங்களை உபத்ரவிக்கமாட்டார்க"ளென்று, ஆயிரம் வர்ஷங்களவரையில் ஒரு வ்ரதத்தையனுஷ்டித்துவந்தார். தேவர்கள் அந்த ஸமயம் பார்த்துச் சுக்ராசார்யர் இல்லையென்ற தைர்யத்தால், அஸுரர்களுடன் சண்டைக்குச் சென்றார்கள். அஸுரர்கள் சுக்ராசார்யரின் தாயான ப்ருகுவின் பத்னியைச் சரணமடைய, அவள் அவர்களைக் காப்பாற்றுவதாகப் ப்ரதிக்ஞைசெய்தாள். தேவர்கள் அவளை எதிர்க்க, அவள் இந்த்ரனை அசையமுடியாமல் ஸ்தம்பனஞ்செய்தாள். மஹாவிஷ்ணு அவனுக்கு ஸஹாயமாய் வர, அவரை எரித்துவிட யத்னித்தாள். அதைக்கண்டு, பகவான் தன் சக்ரத்தால் அவளுடைய தலையையறுத்தார். அதனால் ப்ருகு மஹர்ஷி மஹாவிஷ்ணுவை, "நீர் ஏழுதடவை மனுஷ்யனாய்ப் பிறக்கவேண்டு"மென்று சபித்துத், தன் தபோபலத்தால் இறந்த பத்னியைப் பிழைப்பித்தார். ப்ருகுவின் சாபப்படி மஹாவிஷ்ணுவானவர் தத்தாத்ரேயர், பரசுராமர், தசரதராமர், வேதவ்யாஸர், க்ருஷ்ணன், காச்யபனுடைய புத்ரனான உபேந்த்ரன், கல்கியென்ற ஏழு அவதாரங்களை எடுக்கும்படி நேர்ந்தது.—வாயுபுராணம்.

66. 34. அந்த சமயத்தில்:—"தேவர்கள் தங்களை ரக்ஷிப்பவரைத் தேடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் நீதனால் தேவர்களுக்கதிபதியும், ஸர்வஜ்ஞரும், பரமகருணாநிதியுமானாலும், ஸம்ஸாரிகள் தங்களை ரக்ஷிக்கும்படி தன்னை ப்ரார்த்திக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிறார்" என்றபடி, வெகுகாலமாய் பகவான் தேவர்களுடைய ப்ரார்த்தனையை எதிர்பார்த்திருந்தாரென்று தெரிகிறது.

67. 25. உம்மைத்தவிர:—"ருத்ரன் முதலியவர்களிருக்கையில் என்னைமாத்ரம் நீங்கள் ப்ரார்த்திப்பதற்கு ந்யாயமென்ன"வென்றால், ப்ரஹ்மாவிடத்திலிருந்தும் ருத்ரனிடத்திலிருந்தும், ரா

வணன் முதலியவர்கள் அநேகவரங்களைப் பெற்றிருக்கிறார்களென்பது.

68. 11. ருத்ரர்களும்: என்றதால் தேவர்களுடன் ருத்ரனும் பகவானை அடைந்து ப்ரார்த்தித்ததாய்த் தெரிகிறது.

68. 25. "இப்படி மனுஷ்யலோகத்தில் தசரதருடைய புத்ரனாய்ப் பிறந்து, ராவணனை வதஞ்செய்யவேண்டுமென்று சொன்னீர்கள். உபேந்த்ரனைப்போல், நான் என் நிஜஸ்வரூபத்துடன் அவதாரஞ்செய்யவேண்டுமா? அல்லது வேறுரூபத்துடன் அவதாரஞ்செய்யவேண்டுமா?" வென்று தேவர்களைக் கௌரவதைசெய்வதற்காகக் கேட்கிறார்.

69. 20. பூதம்:—பகவானே தன் தேஜஸால் பூர்ணமான பாயஸத்தையெடுத்துக்கொண்டு, அக்னியிலிருந்து வெளிப்பட்டார். அவருடைய தேஜஸைத் தரிப்பதற்கு வேறொருவரால் முடியுமா? —திலகம்.

அக்னிபகவானே பாயஸத்தையெடுத்துவந்தார்.—அத்யாத்ம 3 ஆ. ரா. I.

70. 33. கொடுத்தார். கௌஸல்யையும் கைகேயியும் பாயஸத்தில் தங்களுக்குக் கிடைத்த பாகத்தில் கொஞ்சம் எடுத்துத் தங்களுடைய வேலைக்காரியான ஸுமித்ரைக்குக் கொடுத்தார்களென்—பட்டிகாவ்யம். அத்யாத்ம. III.

ஸுவர்சசலையென்ற ஓர் அப்ஸரஸ் ப்ரஹ்மஸபையில் நர்த்தனஞ்செய்யும்பொழுது பிசகினதால், "நீ பருந்தாய்ப் பிறக்கக்கடவ"தென்று ப்ரஹ்மாவால் சபிக்கப்பட்டாள். பிறகு அவளை மிகவும் ப்ரார்த்திக்க, "பகவான் ஸ்ரீராமனாய் அவதாரஞ்செய்யுங்காலத்தில், தசரதர் தன் பத்னிகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும் பாயஸத்தில் கைகேயியின் பாகத்தை நீ அபஹரித்து அஞ்சனபர்வதத்தில் விட்டெறிந்தவுடன் உன் சாபம் நீங்கு"மென்றார். அவளும் பருந்தாய்ப் பிறந்து அப்படியே செய்து, சாபம் நீங்கி ப்ரஹ்மலோகஞ்சென்றாள். கௌஸல்யையும் ஸுமித்ரையும் தங்களுடைய பாகத்தில் கொஞ்சமெடுத்துக் கைகேயிக்குக் கொடுத்தார்கள். பருந்தால் போடப்பட்ட பாயஸம் அந்தப் பர்வதத்தில் புத்ரனுக்காகத் தபஸ்செய்துகொண்டிருந்த அஞ்சனையென்ற வானரஸ்த்ரீயின் கையில் வீழ், அதிலிருந்து

ஆஞ்ஜநேயர் பிறந்தார். கௌஸல்யை கொடுத்த பாகத்தின் அம்சத்திலிருந்து பரதனும், ஸுமித்ரையின் பாகத்திலிருந்து சத்ருக்னனும் உண்டானார்கள் [ஆ. ரா. I-103-108.]

716. தசிததார்கள்:— அவர்கள் கர்ப்பமாயிருக்கும்பொழுது, வஸிஷ்டர் தசரதனையழைத்து, "கர்ப்பிணிகள் விரும்பும் வஸ்துக்களைக் கொடுக்காவிட்டால், அவர்கள் வருத்தமடைவார்கள். அது கர்ப்பத்திலுள்ள சிசுவைப் பிடிக்கும். அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்தால், தீர்க்காயுஸுள்ள புத்ரன் பிறப்பா"னென்றார். தசரதர், "அப்படியே செய்கிறேனெ"ன்று, அன்றிராத்ரி தன் ப்ரியபார்யையான கைகேயியைப்பார்த்து, "உன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்கிறேன், உனக்கென்னவேண்டுமெ"ன்றார். கைகேயி, "மஹாராஜ! எனக்குப் பிறக்கும் புத்ரன் இந்த ராஜ்யத்தை ஆளவேண்டும். கௌஸல்யையின் புத்ரன் ஊழியஞ்செய்யவேண்டு"மென்றாள். ஸுமித்ரையின் அந்தப்புரத்திற்குச் சென்று, அவளையும் அப்படியே கேட்க, அவள், "ஸ்வாமி! எனக்குப் பிறக்கும் புத்ரன் கௌஸல்யையின் புத்ரனுக்கு ஸகல கைங்கர்யத்தையும் செய்யும் பாக்யத்தைப் பெறவேண்டும். எனக்குக் கௌஸல்யையிடத்திலுள்ள ப்ரீதி விருத்தியாகவேண்டும். தங்களுடைய ப்ரேமைக்கு நான் எப்பொழுதும் பாத்ரமாயிருக்கவேண்டு"மென்றாள். கௌஸல்யையின் அந்தப்புரத்திற்குச் சென்று, அவளையும் அப்படியே கேட்க, அவள், "ப்ரபோ! என் கர்ப்பத்திலிருக்கும் சிசு யாதொரு அபாயமுமில்லாமல் தீர்க்காயுஸுள்ளவனாயிருக்கவேண்டும். நமது விவாஹஸமயத்தில், ராவணன் நம்மை நாசஞ்செய்ய யத்னித்ததை மறந்துவிட்டீர்களோ?"வென்றாள்.

ராவணனென்ற பெயரை உச்சரித்தவுடன், கர்ப்பத்திலிருந்த சிசு கோபாவேசங்கொண்டு, "லக்ஷ்மண! இந்த க்ஷணமே என் கோதண்டத்தையும் அஸ்த்ரங்களையும் கொண்டுவா. அந்தத் துஷ்டராக்ஷஸனை வதஞ்செய்து, அவனுடைய ராஜ்யத்தை விபீஷணனுக்குக் கொடுக்கிறேன். அதிசீக்ரத்தில் ஸமுத்ரத்தில் அணை கட்டுங்கள். என் மித்ரர்களான வானரர்கள் லங்கைக்குப் போய்ச் சேரவேண்டு"மென்று கர்ஜித்தது. கௌஸல்யை பயத்தால் மூர்ச்சையடைந்தாள். தசரதர் அவளுக்கு ஏதோ துஷ்டதேவதை பிடித்திருக்கிறதென்றெண்ணி வஸிஷ்டரையழைத்துவந்தார். அந்த மஹர்ஷி நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டு, அந்தச் சிசு

விற்கு ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத், தசரதனையும் கௌஸல்யையையும் கொண்டாடி, அவர்களுக்குக் கிடைத்த அபூர்வமான பாக்யத்தைத் தெரிவித்தார்.

12. இந்த ஸர்க்கத்தில் சொல்லப்பட்ட வானரர்களின் உத்பத்தி முதலிய விருத்தாந்தங்களைப்பற்றி கிஷ்கிந்தாகாண்டம் நோட்டுகளைப் பார்க்க.

73-14 ரிக்ஷவான்:—நர்மதா தபதியென்ற நதிகளுக்கு நடுவிலுள்ள பர்வதம். தற்காலத்தில் அதற்கு ஸாத்பூராவென்று பெயர். (பாரதம் வனபர்வம் 61-21).

விஷ்ணுபுராணம் II. 3. 11-ல் தாபி பயோஷ்ணி நிர்விந்த்யாவென்ற நதிகள் இதிலிருந்து உண்டாவதாய்ச் சொல்லப்படுகிறது. தாபி தபனி தபனாத்மஜையென்ற நதிக்குப் பிற்காலத்தில் தப்தியென்று பெயருண்டு. பயோஷ்ணியென்பது இப்பொழுது பூர்ணாவென்று பெயருள்ளது. அது தப்தியில் விழுகிறது. நர்மதைக்குத் தெற்கில் விதர்ப்பதேசத்திலிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. (பாரதம்-வனபர்வம் 85-40; 120-31; 121-16). இந்த நதி இதரநதிகளைக் காட்டிலும் மஹாபரிசுத்தமானதென்று ஷை 88-9ல் சொல்லப்படுகிறது. நிர்விந்த்யாவென்பது மேகதூதம் 1-29-ல் சொல்லப்பட்ட நதியே. மல்லிநாதருடைய வ்யாக்யானத்தில், அது விந்த்யையிலிருந்து வடக்குமுகமாய், உஜ்ஜயனிக்குக் கிழப்புறத்தில் ஓடுகிறதென்று சொல்லியிருக்கிறது. தற்காலத்தில் அவ்விடத்திலுள்ள பார்வதீயென்ற நதியாயிருக்கலாம். இது ரிக்ஷவானென்ற பர்வதத்திலிருந்து உண்டாயிற்றென்பது கைப் பிசகாயிருக்கலாம். சில புராணங்களில் இது விந்த்யையிலிருந்து உண்டாவதாய்ச் சொல்லப்படுகிறது.

11-பார்வதியின் சாபத்தால் தேவர்களுக்குத் தங்களுடைய பார்யைகளிடத்தில் புத்ரர்களை உண்டாக்கமுடியவில்லை. ஆகையால் கந்தர்வவித்யாதர அப்ஸரஸ்த்ரீகளிடத்தில் புத்ரர்களை உண்டுபண்ண வேண்டியிருந்தது. நந்திகேசவரர் ராவணனுக்குக் கொடுத்திருக்கும் சாபத்தின்படி அவர்கள் வானரரூபங்களைத் தரிக்கும்படி நேர்ந்தது. ராவணஸம்ஹாரத்தில் ராமனுக்கு ஸஹாயஞ்செய்வதற்காக வாலி பிறந்தானென்று எப்படிச் சொல்லமுடியுமென்றால், அவனுடைய புத்ரனை அங்கதன் ராமனுக்கு விசேஷஸஹாயஞ்செய்தான். மே

னும் வாலியில்லாவிட்டால் ராமனுக்கு வானரர்களுடைய ஸஹாயமே கிடைத்திருக்காது. மேலும் ஸுக்ரீவனுக்கு விரோதியாய் வாலி ஏற்பட்டதால், ராமன் அவனுக்குஒத்தாசைசெய்யவும் அதற்குப்பதிலாய் வானரர்களுடைய ஸஹாயத்தையடையவும் நேர்ந்தது. வாலி ராமனுக்கு மித்ரனாயிருந்தால், ராவணன் ஒருக்ஷணத்தில் ஸீதையைக் கொண்டுவந்து கொடுத்திருப்பான். ஆனால் ராக்ஷஸவதமும் பூபாரநிவிருத்தியும் நேராது.

இதர தேவதைகள் தங்களுடைய அம்சரூபிகளான புத்ரர்களை ஸிருஷ்டித்தார்கள். ஆனால் பரமசிவன் ராவணனிடத்திலுள்ள ப்ரீதியால் யாதொருவனையும் ஸிருஷ்டிக்கவில்லை.

ஆ.—ரிஷ்யசிருங்கர் புத்ரகாமேஷ்டி செய்ய ஆரம்பித்தபிறகு தேவதைகள் யாசகசாலையில் வந்தார்கள். பிறகு விஷ்ணுவின் அனுக்ரஹம். பிறகு வானரர்களுடைய உத்பத்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ராவணனுடைய திக்விஜயகாலத்தில் வாலி ஸுக்ரீவர்கள் இருந்தார்களென்றும், மைந்தனும் த்விவிதனும் அமிருதத்திற்காக ஸமுத்ரத்தைக் கடையுங்காலத்திலிருந்தார்களென்றும், க்ரோதனனென்ற வானரன் தேவாஸுரயுத்தத்தில் தேவர்களுக்கு ஸஹாயஞ்செய்தானென்றும், இதர வானரச்ரேஷ்டர்கள் வெகுகாலமாய் ஜீவித்துவந்தார்களென்றும், தெரிகிறது. ராமனுடைய அவதாரகாலத்திற்கு சற்றுமுன்பு பிறந்தார்களென்று எப்படிச் சொல்லமுடியும்?

ஸ:—ப்ரஹ்மா தேவதைகளைப்பார்த்து, "உங்களுடைய அம்சங்களிலிருந்து புத்ரர்களை உண்டுபண்ணுங்களென்" என்று பொதுவாய்ச்சொன்னார். ஆனால் பூர்வகாலத்தில் நடந்த ஜாம்பவானுடைய உத்பத்தியைப்போல், வாலி ஸுக்ரீவன் முதலியவர்களுடைய உத்பத்தியையும் சொல்லுகிறார். அவர்களை முந்தி உண்டுபண்ணவில்லையோ அவர்களைமாத்ரம் அப்பொழுது தேவர்கள் உண்டுபண்ணினார்களென்று தாத்பர்யமேதவிர, அந்தகாலத்தில் எல்லோரையும் உண்டுபண்ணினார்களென்று அர்த்தமல்ல.

75-25-பெற்றாள்:—ராமன் கௌஸல்யையின் கர்ப்பத்திலிருந்து, நான்கு புஜங்களுடன் திவ்யாயுதங்களையும் ஸ்ரீவத்ஸம் வனமாலை பீதாம்பரம் முதலிய ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு அவதரித்தார். நித்யவிபூதியில ஸேனைவஸாதிக்கும் திவ்யமங்கள

விக்ரஹத்துடன் பகவான் எழுந்தருளினதைக்கண்டு, கௌஸல்யை பரமானந்தபரவசமடைந்து, அவருடைய அனந்தகல்யாண குணங்களையும் மஹிமையையும் கொண்டாடி ஸ்தோத்ரஞ்செய்து, "ப்ரபோ! தாங்கள் லோகத்தார்களுக்கு இந்தத் திவ்யரூபத்தைக் காட்டாமல் லீலாவதாரரூபத்தையெடுக்கவேண்டுமெ"ன்று ப்ரார்த்தித்தாள். அதற்கு ஜகதீசன் "அப்படியே ஆகட்டும். மனுஷ்ய ரூபமாய் அவதரித்து, ராவணாதிகளை ஸம்ஹரிக்கும்படி ப்ரஹ்மா என்னை ப்ரார்த்தித்தார். நான் உங்களுக்குப் புத்ரனாய்ப் பிறக்கவேண்டுமென்று நீயும் தசரதரும் பூர்வஜன்மங்களில் தபஸ்செய்தீர்கள். இந்தக்காரணங்களால் நான் உனக்குத் தர்சனங்கொடுத்தேனெ"ன்றார்.—அத்யாத்ம. பாலகாண்டம் III. ஆ-ரா. ஸாரகாண்டம் II.

30. விளங்கினாள். தசரதர் செய்த யக்ஞத்தின் மஹிமையால் மாத்ரம் பகவான் அவதரிக்கவில்லை. கௌஸல்யையின் தபஸிற்குகந்து அநுக்ரஹித்தார்.

76-17. நற்குணம். ராமன் தர்மத்தில் ருசியுள்ளவர்; லக்ஷ்மணன் பகவானுக்குச் சேஷனாயிருக்கவேண்டுமென்ற தத்வத்தை அனுஷ்டித்துக் காட்டினவர்; பகவானுக்குப் பாதந்த்ரனாயிருக்க வேண்டுமென்றதைப் பரதன் அனுஷ்டித்தார். பாகவதர்களுக்குப் பாதந்த்ரனாயிருக்கவேண்டுமென்பதை சத்ருக்னன் ஆசரித்தார்.

76-20. குமாரர்களும்—லக்ஷ்மணன் தங்கநிறமுள்ளவர்; பரதன் பச்சைவர்ணமுள்ளவர்; சத்ருக்னன் வெளுப்புநிறமுள்ளவர்—கம்பராமாயணம்.

21. அவதரித்தபோது:—ஆ. பரதன் ஸாக்ஷாத் விஷ்ணுவின் நாலிலொருபாகமென்றும், லக்ஷ்மணசத்ருக்னர்கள் விஷ்ணுவின் பாதி அம்சங்களென்றும் ஏன் சொல்லப்பட்டிருக்கிறது?

ஸ. 'ஸாக்ஷாத் விஷ்ணுவின்,' என்றதால், விஷ்ணுவின் பாதி அம்சமான ராமனுடைய அம்சத்தில் நாலிலொருபங்கென்று தாத்பர்யம். லக்ஷ்மணசத்ருக்னர்கள் விஷ்ணுவின் பாதி அம்சமென்றதில், பாதியென்றதற்கு ஒருபாகமென்று அர்த்தம். பாயஸத்தைப் புஜித்த க்ரமத்தின்படி பரதன் லக்ஷ்மணனுக்குமுந்திப் பிறந்தார்.

ஆ: அதெப்படி? லக்ஷ்மணனிடத்தில் விஷ்ணுவின் அம்சம் அதிகமாயிருக்கின்றது. மேலும் ஸுமித்ரை முதலில் பாயஸத்

தைச் சாப்பிட்டிருக்கலாம். ஆகையால் லக்ஷ்மணனே பரதனுக்கு மூத்தவர். பரதன் ராமலக்ஷ்மணர்களையும் ஸீதையையும் நந்திக்ராமத்தில் மறுபடியும் பார்த்தபொழுது, ராமனை நமஸ்கரித்துப் பிறகு லக்ஷ்மணனையும் ஸீதையையும் நமஸ்கரித்து அபிவாதனஞ் செய்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ. அப்படியல்ல, கைகேயியே முதலில் பாயஸத்தைக் குடித்தாள். ஸுமித்ரைக்கு இரண்டாவது தடவை பாயஸத்தைக் கொடுத்தபடியால் கைகேயிக்குப்பிறகே அவள் புஜித்திருக்கவேண்டும். மேலும் 'பரதனை மூத்தவனுடையவனேயே'ன்று சிலவிடங்களில் ராமன் சொல்லியிருக்கிறார். நந்திக்ராமத்தில், ஸீதையைமாத்ரம் நமஸ்கரித்தார். லக்ஷ்மணனை ஆலிங்கனஞ்செய்துகொண்டாரென்று கருத்து. இதற்கு விரோதமாய்ச் சொல்லியிருந்தால் வெவ்வேறு கல்பங்களில் நடந்த பேதங்களென்று எண்ணவேண்டியது.

"பாயஸத்தைப் புஜித்தபிறகு கர்ப்பந்தரித்தபடியால், ராமலக்ஷ்மணபரதசத்ருக்னர்களுடைய தேஹங்கள் பாயஸத்தால் செய்யப்பட்டவையேயொழிய சுக்லசோணிதவிகாரங்களல்ல. பகவானுக்கு ப்ரக்ருதிஸம்பந்தமான தேஹமில்லை. பஞ்சபூதங்களுடைய சேர்க்கையாலுண்டான தேஹமில்லையே"ன்று புராணங்களில் சொல்லியிருக்கின்றன. பகவானுடைய ஆறுகல்யாணகுணங்களே பாயஸரூபமாய் மாறின. அன்னபானங்களால அந்தத்தேஹங்கள் விருத்தியடையவில்லை. கேவலம் இச்சையால்மாத்ரம் அந்தந்த ஸமயத்திற்குத் தகுந்த மாறுதல்களையடைந்தன.

77. 5. சேன்று:—"லக்ஷ்மணன் பிறந்த பன்னிரண்டாவது நாளில் அதாவது ராமன் பிறந்த பதின்மூன்றாவது நாளில்". க்ஷத்ரியனுக்குப் பன்னிரண்டுநாள்வரையில் ஸூதகமென்று சொல்லியிருந்தாலும், ராமஜன்மநிமித்தமான ஸூதகமத்தியில் வந்த லக்ஷ்மணஸூதகம முன்ஸூதகத்தின் காலமாகிய பன்னிரண்டு நாளிருந்து பதின்மூன்றாவதுநாளில் குழந்தைகளுக்கு நாமகரணம் செய்யப்பட்டது.

வஸிஷ்டமஹர்ஷி:— க்ஷத்ரியனுக்கு நாமகரணஞ்செய்ய அதிகாரமில்லை. ஆகையால் புரோஹிதர்முகமாய்ச் செய்வித்தார்—ததகக்

6. ராமன்:—பரமாத்மஸ்வரூபியான இவரிடத்தில் ஸகல யோகிகளும் ஸகலரிஷிகளும் ஸகலப்ராணிகளும் ஸந்தோஷிப்ப தால் (ரமிப்பதால்) ராமன். "தாமரைமலரில் வீற்றிருக்கும் ஸ்ரீ தேவியின் நாயகனானதால் (ரமணன்) பகவானுக்கு ஸ்ரீராமனென்று பெயரிடப்பட்டது. இதை ஸ்மரிப்பதால் அவருடைய ஆயிரம் நாமங்களையும் ஸ்மரித்த பலனுண்டாகும்—பாத்மபுராணம்.

7. பரதன்:—தசரதர் பரலோகஞ்சென்று, ராமன் வனத்தி லிருக்கும்பொழுது, அரசனில்லாத ராஜ்யத்தை ஆண்டதால் (பரித்ததால) பரதன்.

8. லக்ஷ்மணன், சத்ருக்னன்:—ராமனுக்குக் கைங்கர்யஞ் செய்வதென்ற லக்ஷ்மீயையுடையவர் லக்ஷ்மணன். சத்ருக்களை நாசஞ்செய்யும் சக்தியுடையவராகையால் சத்ருக்னன்.

9. பெயர்வைத்தார்:—ஒவ்வொருஜீவனும் கர்மங்களைப் பலா பேக்ஷையிலலாமல் அனுஷ்டித்துச, சித்தசுத்தி பிறந்து, ஸத் குருலாபததையடைந்து, தான் கர்மபந்தத்திலிருந்து விடுபட்டு; அகண்டமான ஞானத்தையும் சக்தியையும் ஆனந்தத்தையும் பெ றறு, இதாஜீவகோடிகளைத் தானடைந்த பரமலாபத்தை அடை யுமபடிசெய்வது உத்தமதர்மமென்று நமது மதத்தில் உபதேசிக் கபபடுகிறது. ஜீவன் உபயோகிககும ஒவ்வொருதேஹமும் கூடிய வரையில் சுத்தமான பரமாணுக்களால் அமைக்கப்படவேண்டு மென்றும், ப்ரக்ருதியின் அநேகபேதங்களை வெளிபபடுத்துவதற் கும் அனுபவங்களை ஸம்பாதிப்பதற்கும் தகுந்த கருவிகளாயிருக்க வேண்டுமென்றும், ஜீவன் ஸ்த்ரீயின்தேஹத்தில் கர்ப்பத்தில் ப்ர வேசிககும் க்ஷணம்முதல் ஸ்தூல ஸூக்ஷ்மதேஹங்களை விட்டுப் பிதிருக்களுடன் சேரும்வரையில் அநேக ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டி ருக்கின்றன. ஸ்தூல ஸூக்ஷ்ம காரண மஹாகாரணமென்ற தே ஹங்களைக் கூடியவரையில் சுத்தமான பரமாணுக்களாலமைத்து, அசுத்தமான அணுக்கள் சேராமலிருக்கும்படி ரக்ஷிப்பதே ஸம்ஸ் காரங்களின் கருத்து. அவைகளில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோந்நயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம், சூடாகரணம், கேசாந்தம், உபநயனம், ஸமாவர்த்தனம், விவா ஹம், தர்ப்பணம், ஔபாஸனம், ஸபிண்டீகரணமென்றவை முக்கியம்.

கர்ப்பாதானம்:—பர்த்தா பத்னியின் கர்ப்பஸ்தானத்தைக் கையால் தொட்டு, "விஷ்ணுவானவர் உன் கர்ப்பத்தை ஸித்தமாக்கட்டும்; த்வஷ்டா ரூபங்களை உண்டாக்கட்டும். ஓ, ஸினீவாலி! கர்ப்பத்தை உண்டுபண்ணு" என்ற மந்த்ரங்களை (ரிக்வேதம் X. 185. 21. 22) உச்சரித்துப் பிறகு கர்ப்பாதானஞ்செய்யவேண்டியது. இதை அஜாக்ரதையாயாவது, அலக்ஷ்யமாயாவது, ஸ்த்ரீபுருஷர்களின் மனதில் அசுத்தமான எண்ணங்களிருக்கும்பொழுதாவது, கேவலம் ஸுகானுபவத்திற்காவது செய்யக்கூடாது. ஒரு ஜீவனுக்கு உத்தமகதியைக் கொடுக்கத்தகுந்த தேஹத்தை உண்டுபண்ணுகிறோமென்ற எண்ணத்துடனும், ஈச்வரன் ப்ரபஞ்சத்தை ஸிருஷ்டித்த சக்தியின் அம்சத்தால் நாமும் ஒரு தேஹத்தை ஸிருஷ்டிக்கிறோமென்ற எண்ணத்துடனும் செய்யவேண்டியது. ஓர் புண்யஜீவன் அந்தத்தேஹத்தை உபயோகித்து உத்தமகதியை அடையவேண்டுமென்று பர்த்தா ப்ரார்த்திக்கிறான். அவனுடைய மனஸும் ப்ரக்ஞையும் தன் இஷ்டதேவதையிடத்தில் லயித்திருக்கவேண்டியது; பத்னியின மனஸும் ப்ரக்ஞையும் தன் பர்த்தாவிடத்தில் லயித்திருக்கவேண்டியது.

பும்ஸவனம்:—கர்ப்பந்தரித்த மூன்றாவது மாஸத்தில் புஷ்யம் அல்லது ச்ரவணநக்ஷத்ரத்தில் புத்ரன் பிறப்பதற்காக பும்ஸவனம் செய்யவேண்டும். மாதாவின கர்ப்பத்தில் அன்னமய ப்ராணமய கோசங்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. ஸோமலதையையாயாவது, தர்ப்பையின் நுனியையாவது, அரசமரத்தின் கொழுந்தையாவது, அக்னியில காய்ந்த யூபஸ்தம்பத்தின் ஓர் பாகத்தையாவது, நசுக்கிப் பிழிந்த ரஸத்தை அல்லது ஆஹுதிசெய்த பிறகு ஹூவென்ற பாத்ரத்தில் மிகுந்ததையாவது, அவளுடைய வலதுமூக்கில் பிழிந்து, ரிக்வேதம் I. I. 3; III. IV. 9; V XXXVII. 2; II. III. 9-ல்சொல்லியிருக்கும் மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும்—சாங்காயனகிருஹ்யஸூத்ரம்.

பத்னியை உபவாஸமிருக்கச்செய்து, அவளைப்போன்ற நிறமுள்ள கன்றையுடைய பசுவின் தயிரில் மூன்றுகை வாங்கிக் குடிக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு தடவையிலும் அதில் இரண்டு அவரைவிதைகளையும் ஒரு கோதுமையையும் போடவேண்டும். பர்த்தா "எதைக் குடிக்கிறாய்? எதைக் குடிக்கிறாய்?" என்று

கேட்க, அவன் "புத்ரனுடைய உத்பத்தியை, புத்ரனுடைய உத்பத்தியை" என்று மூன்று தடவை சொல்லவேண்டும். பிறகு வட்டமான அறையின் நிழலில், வாடாத ஒஷதியின் ரஸத்தை அவளுடைய வலது மூக்கில் பிழிந்து, ப்ராஜாபதிக்கு ஆஹுதிசெய்து, அவளுடைய ஹ்ருதயத்தைத் தொட்டு, "நன்றாய் வகுக்கப்பட்ட தலைமயிரையுடையவளே! உன் ஹ்ருதயத்தில் ப்ராஜாபதியிடத்தில் மறைந்திருப்பதை நான் அறிவேன். இது நிச்சயம். புத்ரர்களால் நேரும் கஷ்டத்தை அனுபவிக்காமலிருக்கக் கடவேனென்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது.—ஆச்வலாயனக்ருஹ்யஸூத்ரம்.

கர்ப்பத்திலுள்ள சிசு அசைவதற்குமுன் பும்ஸவனம் செய்யவேண்டியது.—பாரஸ்கரக்ருஹ்யஸூத்ரம்.

பத்னியின் பின்பக்கத்தில் நின்றுகொண்டு, அவளுடைய வலது தோளைப் பிடித்துத், தொப்புளைத் தொட்டு மந்த்ரப்ராஹ்மணம் I. IV. 8ல் சொல்லியிருக்கும் மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது. பிறகு 21 உளுந்துகளை கொடுத்து, ஒரு அரசமரத்தின் மொட்டை வாங்கவேண்டியது. அது காய்ந்திராமல், புழுக்கள் அரிக்காமல், இரண்டு பக்கங்களிலும் விருஷணங்களைப்போன்ற பழங்களுடனிருக்கவேண்டியது. அதை "எல்லாவிடங்களிலுமுள்ள ஒஷதிகளே! நீங்கள் நல்ல மனஸுடன் இந்த மொட்டிற்கு விசேஷசக்தியைக்கொடுங்கள்; இது நான் உத்தேசித்த கார்யத்தைச் செய்யட்டு"மென்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது. பிறகு அதை வெட்டவெளியில் வைக்கவேண்டியது. ஓர் கன்னிகையாவது பதிவ்ரதையாவது ப்ரஹ்மசாரியாவது ப்ராஹ்மணியாவது அதைக் கல்லால் நசுக்கவேண்டியது. அந்தக்கல்லை பின்னுல்இழுக்கக்கூடாது. பத்னியைப் படுக்கச்செய்து அவளுடைய வலதுமூக்கில் அந்தரஸத்தைப் பிழிந்து, மந்த்ரப்ராஹ்மணம் 1. IV. 9-வது மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது—காதிரக்ருஹ்யஸூத்ரம்.

அரசமரத்தின் மொட்டை வாங்கும்போது "நீ ஸோமனுக்கு ஸொந்தமானல் ஸோமனுக்காக உன்னை வாங்குகிறேன். நீ வருணனுக்கு ஸொந்தமானல் வருணனுக்காக உன்னை வாங்குகிறேன். நீ வஸுக்களுக்கு ஸொந்தமானல் வஸுக்களுக்காக உன்னை வாங்குகிறேன். நீ ருத்ரர்களுக்கு ஸொந்தமானல் ருத்ரர்களுக்காக உன்னை வாங்குகிறேன். நீ ஆதித்யர்களுக்கு ஸொந்தமானல் ஆதித்யர்க

ளுக்காக உன்னை வாங்குகிறேன். நீ மருத்துக்களுக்கு ஸொந்தமானால் மருத்துக்களுக்காக உன்னை வாங்குகிறேன். நீ விச்வேதேவர்களுக்கு ஸொந்தமானால் விச்வேதேவர்களுக்காக உன்னை வாங்குகிறேன்'' என்ற மந்த்ரங்களை ஜபித்து, ஒவ்வொரு மந்த்ரத்தின் முடிவில் மூன்று உளுந்துகளை அந்த மரத்தின் ஸொந்தக்காரனுக்குக் கொடுக்கவேண்டியது; அல்லது அந்த மரத்தடியில் வைக்கவேண்டியது.—ஹிரண்யகேசிக்ருஹ்யஸூத்ரம்.

நான்காவது மாஸத்தில் கர்ப்பரக்ஷணமென்ற ஸம்ஸ்காரஞ் செய்யவேண்டியது. ரிக்வேதம் X. 162வது மந்த்ரத்தில் 6 ரிக்குகளை ஜபித்து, 6 அன்ன ஆஹுதி செய்யவேண்டியது. பிறகு ஷை 163-வது மந்த்ரத்தை ஜபித்து, ஒவ்வொரு ரிக்கின் முடிவிலும் பத்னியின் அங்கங்களை அந்த நெய்யால் தடவவேண்டியது.—சாங்காயன க்ருஹ்யஸூத்ரம். I. 21. கர்ப்பத்திலுள்ள சிசுவிற்கு யாதொரு அபாயமும் நேராமலிருப்பதற்காக இது செய்யப்படுகிறது.

ஸீமந்தோன்னயனம்.—கர்ப்பந்தரித்த ஏழாவது மாஸத்தில் பத்னியை ஸ்நானஞ்செய்வித்துப், புதுவஸ்த்ரத்தைத் தரிக்கும்படி செய்து, அக்னிக்குப்பின் உட்காரச்செய்து, பர்த்தாவை அவள் தொட்டுக்கொண்டிருக்கையில் மஹாவ்யாஹ்ருதிகளைச் சொல்லி ஹோமஞ்செய்யவேண்டியது. பிறகு அரிசியையும் பசைப்பயிற்றையும் கலந்து சமைத்து, "தாதா தனனைப் பூஜிப்பவர்களுக்கு தீர்க்காயுளையும் க்ஷேமத்தையும் கொடுக்கட்டும். ஸத்யமான தர்மங்களுடைய தேவதையின் அனுக்ரஹத்தை அடையக்கடவோம். தாதா ப்ரஜைகளையும் ஐச்வர்யத்தையும் கொடுக்கிறார் தாதா இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தார். தாதா இந்த யஜமானனுக்கு ஒரு புத்ரனைக் கொடுப்பார். அவருக்கு நெய்யால் பூர்ணமாய் நீங்கள் ஆஹுதிசெய்யவேண்டியதே" என்று ஹோமஞ்செய்யவேண்டும். பிறகு ரிக்வேதம் X CXXI; X. CLXXXIV. 1-ல் சொல்லியிருக்கும் மந்த்ரங்களை ஜபித்துப், பத்னியின் தலைமயிரை நெற்றியிலிருந்து இரண்டு பாகமாய் வகுக்கவேண்டியது. அதற்காக முள்ளம்பன்றியின் மூன்று வெள்ளைப்புள்ளிகளுள்ள முள்ளையாவது, அத்திக்காய்களுடன் தர்ப்பத்தினாலாவது உபயோகிக்கவேண்டியது. பிறகு அவைகளை அவளுடைய மடியில் வைக்கவேண்டியது. அத்திக்காய்களை மூன்றுவட்டங்களுள்ள ஒரு

ரயிற்றில் கோர்த்து, அவளுடைய கழுத்தில் கட்டி,"இந்த விருக்ஷம் ரஸத்தால் பூர்ணமாயிருக்கிறது. நீயும் இதைப்போல் ப்ரஜைகளைப் பெறக்கடவாயெ"ன்று சொல்லவேண்டியது. வீணை வாசிப்பவர்களைப் பார்த்து "ஸோமராஜாவைக்குறித்துப் பாடுங்களே"ன்று பர்த்தா சொல்லவேண்டியது. ஒரு தீர்த்தபாத்ரத்தில் அவளைப் போட்டு அந்தத் தீர்த்தத்தை அவளைக் குடிக்கச் செய்து, ரிக்வேதம் X. CLXXXIV. 1; II. XXXII, 4-8 மந்த்ரங்களை ஜபிக்கவேண்டியது. பிறகு அவளைத் தொட்டு "நீயே கருத்மான்; நீயே ஸுபர்ணன்; த்ரிவிருத்ஸ்தோமமே உன் சிரஸ்; காயத்ரம் உன் நேத்ரம்; சந்தஸே உன் அவயவங்கள்; யஜுஸே உன் பெயர்; ஸாமமே உன் தேஹமே"ன்று உச்சரிக்கவேண்டியது. பிறகு அவளை ஸுவர்ணபூஷணங்களால் அலங்கரித்து, ஸந்தோஷமாய்ப் பாடும்படி செய்யவேண்டியது.—சாங்காயனக்ருஹ்ய ஸூத்ரம் I. 24.

நான்காவது மாஸத்தில் ஸீமந்தோந்நயனம் செய்யவேண்டியது.—ஆச்வலாயனக்ருஹ்யஸூத்ரம்.

ஆறுவது அல்லது எட்டாவது மாஸத்தில் செய்யவேண்டியது.—பாரஸ்கரக்ருஹ்யஸூத்ரம்.

நான்காவது அல்லது ஆறுவது மாஸத்தில் செய்யவேண்டியது. தலைமயிரை வகுத்தபிறகு, எள்ளுகலந்த அன்னத்தின்மேல் நெய்யைத் தடவிப்,பத்னியை அதைப் பார்க்கச் சொல்லி,"உனக்கு என்ன தெரிகிறதெ?"ன்று கேட்கவேண்டும். அவள், "ப்ரஜையையெ"ன்று பதில்சொல்லவேண்டும்—காதிரக்ருஹ்யஸூத்ரம். II. 2.

நாலாவது ஆறுவது எட்டாவது மாஸங்களில் செய்யலாம். மூன்றுதடவை தலைமயிரைவகுத்து, முறையே "பூ: புவ: ஸ்வ:" என்று சொல்லவேண்டியது. பத்னியால் பார்க்கப்பட்ட அன்னத்தை அவளே புஜிக்கவேண்டியது. வயஸ்சென்ற ப்ராஹ்மணஸ்த்ரீகள் அவளுக்கு ஸமீபத்திலுட்கார்ந்துகொண்டு "வீரபுத்ரர்களைப் பெறுவாய்; ஸுமங்கலியாயிருப்பாயெ"ன்று மங்களகரமான வார்த்தைகளைச் சொல்லவேண்டியது—கோபிலக்ருஹ்யஸூத்ரம். II. 7.

அதுவரையில் உபயோகிக்கப்படாத பாத்ரத்தில் ஆற்றிலிருந்து ஜலம் ஓடும் திக்கில் சுத்தமான ஜலத்தை எடுத்துவந்து, பத்னியின் காலடியில் தூர்யந்தியென்ற செடியை வைத்து, அவளுடைய தலையைத் தொட்டு, யஜுர்வேதம் II. XI. 14, 15, 16. 17 என்ற மந்த்ரங்களைஜபித்து அந்த ஜலத்தால் ப்ரோக்ஷணஞ்செய்ய வேண்டியது. அதிக உபத்ரவமில்லாமல் சுகமாய் ப்ரஸவமாகும். ஆபஸ்தம்பகிருஹ்யஸூத்ரம். VI. 14.

அவளுடைய கர்ப்பம் கரைந்துவிட்டால், தொப்புளிலிருந்து மேலே மூன்றுதடவை அவளுடைய நனைந்த கையைப் பிடித்துத் தடவச்செய்து, "த்வஷ்டாவானவர் உன்னைத் தன் பந்தங்களால் கட்டி மேலேபோகும்படி செய்யட்டும். கீழேபோகும்படி செய்ய வேண்டாம். பத்துமாஸங்கள்வரையில் உன் மாதாவின் கர்ப்பத்தில் வஸித்துக்கொண்டிரு. புருஷர்களுக்கு மரணத்தையுண்டாக்காதேயெ"ன்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியது. ப்ரஸவகாலம் ஸமீபித்தவுடன் அவளுடைய தலைப்பக்கத்தில் ஓர் ஜலபாத்ரத்தையும் காலடியில் தூர்யந்தியென்ற செடியையும் வைத்து, அவளுடைய வயிற்றைத் தொடவேண்டியது. பிறகு, "காற்றடிப்பதுபோலவும் ஸமுத்ரம் அசைவதுபோலவும் இந்தச்சிசு அசையக்கடவது. உபத்ரவமில்லாமல் வெளியில் வரவேண்டியதெ"ன்று அவளுடைய தேஹத்தைத் தலையிலிருந்து கால்வரையில் தடவிக்கொடுக்கவேண்டியது—ஹிரண்கேசீகிருஹ்யஸூத்ரம். II. I. 2.

மேற்கண்ட ஸம்ஸ்காரங்கள் மாதாவையும் சிசுவையும் ரக்ஷிக்கின்றன. சிசுவிற்குக் கிடைக்கும் தேஹத்தை அமைப்பதில் அநுகூலமான ஸகல சக்திகளையும் ஒன்றுசேர்க்கின்றன. ஆனால் இவைகளைச் செய்பவர்களுக்கிருக்கவேண்டிய சுத்தியும் ஞானமும் சக்தியுமில்லாததால், இவை இப்பொழுது செய்யப்பட்டும் ப்ரயோஜனத்தைக் கொடுக்கவில்லை.

ஜாதகர்மம்:—குழந்தை பிறந்தவுடன் அதன்மேல் பிதா மூன்று தரம் மூச்சுவிட்டு, "உன் ச்வாஸத்தை ரிக்வேதத்தால் உள்ளே இழுத்துக்கொள்; யஜுர்வேதத்தால் உள்ளே மூச்சுவிடு; ஸாமவேதத்தால் மூச்சை வெளியில் விடு" என்ற மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு மூச்சை உள்ளே இழுக்கவேண்டியது. வெண்

ணெய் தேன் பால் தயிர் ஜலம் இவைகளைக் கலந்து, அல்லது அரிசியையும் பருப்பையும் சேர்த்தரைத்து, தங்கக்கரண்டியால் குழந்தைக்கு மூன்றுதரம் ஊட்டவேண்டியது.

நாமகரணம்:—“ஸகல இஷ்டங்களையும் கொடுக்கும் ஸவிதாவால் ஏற்பட்ட வேதத்தை உத்ஸவத்திற்காக உனக்குத் தேனை ஆஹாரமாய்க் கொடுக்கிறேன். தீர்க்காயுஷ்மானாய் தேவதைகளால் ரக்ஷிக்கப்பட்டு இந்த லோகத்தில் நூறுவர்ஷங்கள் வஸிக்கக்கடவாயெ”ன்று, அந்தக்குழந்தைக்கு ஒரு பெயரை வைக்கவேண்டியது. அது மாதாபிதாக்களுக்குமாத்ரம் தெரியலாம். வழக்கமாய் அழைப்பதற்காக ப்ராஹ்மணர்களுக்கு ப்ரியமான வேறு பெயரைப் பத்தாவது தினத்தில் வைக்கவேண்டியது. கறுப்பு வர்ணமுள்ள எருதின் கறுப்பு வெளுப்பு சிவப்பு மயிர்களைப் பொடிசெய்து, வெண்ணெய் தேன் பால் தயிர் முதலிய பதார்த்தங்களுடன் கலந்து, குழந்தைக்கு நான்கு தடவை கொடுக்கவேண்டியது. இது மாண்டுகேயருடைய மதம்; அப்பொழுது “பூ:! உன்னிடத்தில் ரிக்வேதத்தை வைக்கிறேன்; பலானவனே! ஸ்வாஹா! புவ:! உன்னிடத்தில் யஜுர் வேதத்தை வைக்கிறேன்? பலானவனே! ஸ்வாஹா! ஸ்வ:! ஸாம வேதத்தை உன்னிடத்தில வைக்கிறேன்; பலானவனே! ஸ்வாஹா! பூர்புவ: ஸ்வ:! வாகோவாக்யங்களையும் இதிஹாஸங்களையும் புராணங்களையும் ஓம்! ஸகல வேதங்களையும் உன்னிடத்தில் வைக்கிறேன்; பலானவனே! ஸ்வாஹா!”வென்று ஜபிக்கலாம். குழந்தைக்குப் புத்தியுண்டாவதற்காக அவனுடைய வலதுகாதில் மூன்றுதடவை ‘வாக்’ என்று உச்சரிக்கவேண்டும். மேலும் “வாக்தேவதையும் மனஸும் ப்ராணனும்” என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். குழந்தையின் வலதுகையில் ஓர் தங்க ஆபரணத்தைச் சணல்கயிற்றில் முடிந்து கட்டிப், பத்தாவது தினத்தில் அதை ப்ராஹ்மணர்களுக்காவது கொடுக்கவேண்டும்; அல்லது தானே வைத்துக்கொள்ளலாம். ஆசௌசம் முடிந்து ப்ரஸவக்ருஹத்திலிருந்து மாதா வெளியில்வந்தவுடன், மாதாபிதாக்கள் ஸ்நானஞ்செய்து, புது வஸ்த்ரங்களைத் தரித்துக்கொண்டு, குழந்தைக்கும் புதுவஸ்த்ரம் உடுத்தி, ப்ரஸவித்தது முதல் வளர்த்து வந்த அக்னியில் ஹவிஸைச் சமைத்துக், குழந்தை பிறந்த திதிக்கும் மூன்று நக்ஷத்ரங்களுக்கும் அவைகளின் தேவதைகளுக்கும்

ஆஹுதிசெய்யவேண்டும். குழந்தை பிறந்த நக்ஷத்ரத்திற்குச் செய்யவேண்டிய ஆஹுதியை நடுவில் வைக்கவேண்டியது. "ச்ரேஷ்டமான இந்த அக்னி எங்களுடைய ப்ரார்த்தனைகளை அங்கீகரித்து, இன்று உனக்கு ஆயுளைக் கொடுக்கட்டும். தீர்க்காயுளைக் கொடுக்கும் அக்னியே! இந்த ஹவிஸைப்பெற்றுக்கொண்டு அதிக பலத்தை அடையக்கடவாய். உன் முகமும் இருப்பிடமும் நெய்யால் நிறையக்கடவது. பசுவினிடத்திலிருந்துண்டான தேனை (நெய்யைக்) குடித்துத், தகப்பன் புத்ரனை ரக்ஷிப்பதுபோல், இந்தக் குழந்தையை ரக்ஷிக்கக்கடவாயெ"ன்று இரண்டு ஆஹுதிகளைக் கொடுக்கவேண்டியது. ரிக்வேதம் I. XCI. 7 மந்த்ரத்தை ஜபித்து பத்தாவது ஆஹுதியைச் செய்யவேண்டியது. பிறகு குழந்தைக்கு வைத்த வழக்கமான பெயரை எல்லோர்க்கும் தெரிவித்து ப்ராஹ்மணர்களை ஆசிர்வாதம் செய்யும்படி சொல்லவேண்டியது. இப்படி ஒவ்வொரு மாஸமும் மேற்சொன்ன ஸூதிகாக்னியில் குழந்தை பிறந்த திதிக்கு ஹோமஞ்செய்யவேண்டியது. ஒரு வர்ஷமானபிறகு ஸூதிகாக்னியைக் கலேத்துக், கிருஹஸ்தாக்னியில் குழந்தையுள்ளவரையில் ஒவ்வொரு மாஸமும் ஹோமஞ்செய்யவேண்டியது.

அன்னப்ராசனம்:—குழந்தை பிறந்த ஆறாவது மாஸத்தில் அதற்கு அன்னத்தை ஊட்டவேண்டியது. குழந்தை நன்றாய்ப் போஷிக்கப்படவேண்டுமென்றிருந்தால், வெள்ளாட்டின் மாம்ஸத்தையும், தேஜஸ் விருத்தியாகவேண்டுமென்றிருந்தால் தித்திரியென்ற பக்ஷியின் மாம்ஸத்தையும், வேகத்தில் விருத்தியடையவேண்டுமென்றிருந்தால் மீனுடைய மாம்ஸத்தையும், காந்தி விருத்தியாகவேண்டுமென்றிருந்தால் நெய் கலந்த அன்னத்தையும், பால் தயிர் தேன் நெய்யுடன் குழந்தைக்கு ஊட்டவேண்டியது. "அன்னபதியே! வருத்தமில்லாததும் பலத்தை விருத்திசெய்யக்கூடியதுமான அன்னத்தை எங்களுக்குக் கொடும். கொடுப்பவனை முன்னிற்குக் கொண்டுவாரும். எங்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் மிருகங்களுக்கும் சக்தியை அனுக்ரஹஞ்செய்யும். அக்னியே! இந்தக் குழந்தைக்குத் தீர்க்காயுளையும் தேஜஸையும் கொடும். ஓ, வருண! ஓ, ஸோமராஜ! ஓ அதிதி! இவன் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படி நீங்களும் மற்றத் தேவதைகளும் அனுக்ரஹஞ்செய்யுங்கள்" என்ற மந்த்ரங்களையும் ரிக்வேதம் IV. VII 4. 5; IX. LVVI. 19வது

மந்த்ரங்களையும் ஜபிக்கவேண்டியது. பிறகு அந்தக் குழந்தையை வடக்குநுனியாய்ப் போடப்பட்ட தர்ப்பையில் உட்கார வைத்து, ரிக்வேதம் I. VVII 15-வது மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். மந்த்ரவயாஹ்ருதிகளை உச்சரித்துக்கொண்டு, அன்னத்தை ஊட்டவேண்டும். மிருந்தைத் தாய் புஜிக்கவேண்டும்.

சூடாகர்மா:—ப்ராஹ்மணனுக்கு மூன்றாவது வயதிலும், க்ஷத்ரியனுக்கு ஐந்தாவது வயதிலும், வைச்யனுக்கு ஏழாவது வயதிலும் செய்யவேண்டியது. அக்னியை வெளியறையில் மூட்டிப், பாத்ரங்களில் அரிசி பயறு எள்ளு உளுந்து முதலிய தான்யங்களை நிரப்பி, எருதின் சாணத்தையும் தர்ப்பைக்கட்டையும் கண்ணாடியையும் புதுவெண்ணெய்யையும் பித்தளைக்கத்தியையும் பூமியில் அக்னிக்கு வடக்கில் வைத்து, உஷ்ணஜலத்தில் குளிர்ந்த ஜலத்தை விட்டுப், "பரிசுத்தமான வஸ்துக்களே! மதுரமான வஸ்துக்களே! அழகான வஸ்துக்களே! அளவற்ற தனத்தை அடையும்பொருட்டு ஒன்றிற்கொன்று கலந்துகொள்ளுங்கள். உனக்குத் தீர்க்காயுளையும் காந்தியும் கிடைக்கும்படி ஜலங்கள் உன்னை நனைக்கட்டும். ஜமதக்னி காச்யபர் அகஸ்த்யர் இன்னும் மற்று தேவதைகளுக்கு ஏற்பட்ட ஆயுஷ்காலத்தைக்காட்டிலும் மூன்று மடங்கு ஆயுளை உனக்கு உண்டுபண்ணுகிறே"னென்று சொல்லிக்கொண்டு, குழந்தையின் தலைமயிரில் இடதுபாகத்தை மூன்றுதடவை சற்று உஷ்ணமான ஜலத்தால் ப்ரோக்ஷிக்கவேண்டியது. முள்ளம்பன்றியின் இறகால் தலைமயிரை வாரி புதுவெண்ணெய்யைத் தடவி, ஓர் இளந்தர்ப்பையையெடுத்து, "தர்ப்பையே! இவனைக் காப்பாற்றெ"ன்று உச்சரித்து மயிர்க்குள் வைக்கவேண்டியது. மயிரையும் அந்தத் தர்ப்பையையும் கண்ணாடியால் தொடவேண்டியது. "கூர்மையென்பது நீயே! கோடாலியே உன் தகப்பன்; இவனுக்கு யாதொரு கெடுதியையும் செய்யாதே"யென்று பித்தளைக்கத்தியையெடுத்து, "ஆதியில் ஞானியான ஸவிதா வருணனுடைய தாடியை க்ஷவரஞ்செய்த இந்தக் கத்தியால், தாதாவான பிருஹஸ்பதி இந்த்ரனுடைய தலையை க்ஷவரஞ்செய்த இந்தக் கத்தியால், ஓ ப்ராஹ்மணர்களே! இந்தக் குழந்தையின் தலையை க்ஷவரஞ்செய்யுங்கள். இவன் வெகுகாலம் ஸுகமாய் ஜீவிக்கட்டுமெ"ன்று மூன்றுதடவை மயிரின் நுனியையும் தர்ப்பையையும் வெ

ட்டவேண்டும். அப்படியே வலதுபக்கத்திலும் இரண்டு நடவை வெட்டவேண்டும்.

பெண்களுக்கு மேற்சொன்ன க்ரியைகளை மந்த்ரமில்லாமல் செய்யவேண்டியது. வடகிழக்கில் செடிகள் அடர்ந்தவிடத்திலாவது ஜலக்கரையிலாவது அந்த மயிரைப் புதைக்கவேண்டியது. தாம்பூலங்களைப் பாத்ரங்களுடன் க்ஷவரகனுக்குக் கொடுக்கவேண்டியது.

உபநயனம்:—ப்ராஹ்மணனுக்கு எட்டாவது அல்லது பத்தாவது வயதிலும், க்ஷத்ரியனுக்குப் பதினோராவது வயதிலும், வைச்யனுக்குப் பன்னிரண்டாவது வயதிலும் உபநயனம் செய்யவேண்டியது. இவை முறையே 16, 22, 24, வயதிற்கு மேற்படக்கூடாது. அதற்குப்பிறகு பதிதர்களாகிறார்கள். அவர்களுக்கு யாகம் வேதாத்யயனம் உபநயனம் முதலியவைகளைச் செய்துவைக்கக்கூடாது. அவர்களுடன் பழகக்கூடாது.

ப்ராஹ்மணனுக்கு அரைநூல் முஞ்சப்புல்லாலும், க்ஷத்ரியனுக்கு நாண்கயிறாலும் வைசயனுக்கு ஆட்டின்மயிராலும் செய்யப்படவேண்டியது. ப்ராஹ்மணனுடைய தண்டம், பலாசம் அல்லது பில்வமரத்தாலும், க்ஷத்ரியனுடைய தண்டம், அரசமரத்தாலும், வைச்யனுடைய தண்டம் அத்திமரத்தாலும் செய்யப்படவேண்டியது. ப்ராஹ்மணனுடைய தண்டம் மூக்கின் நுனிவரையிலும் க்ஷத்ரியனுடைய தண்டம் நெற்றிவரையிலும் வைச்யனுடைய தண்டம் தலைமயிர்வரையிலுமிருக்கவேண்டியது. உபநயனகாலத்தில் அந்தப் பையன் தரிக்கும் ஸகல வஸ்துக்களும் உபாத்யாயரைச் சேரவேண்டியது.

பையன் தலைமுழுவதும் க்ஷவரஞ்செய்துகொண்டு, ஸ்நானஞ்செய்து, அலங்கரித்துக்கொண்டபிறகு, உபாத்யாயர் ஹோமஞ்செய்து, இருவரும் அக்னிக்குப் பின்பாகத்தில் உட்காரவேண்டும். உபாத்யாயர் கிழக்குமுகமாயும், சிஷ்யன் மேற்குமுகமாயும் உட்காரவேண்டும். உபதேசகாலத்தில் சிஷ்யன் நிற்கவேண்டும்; உபாத்யாயர் உட்கார்ந்திருக்கவேண்டும். “நம்மைக் கெட்ட வார்த்தைகளிலிருந்து காப்பாற்றி, நமது வம்சத்தார்களைப் பரி

சுத்தஞ்செய்து, உச்வாஸநிச்வாஸங்களையே போர்வையாயுடைய இந்தத் தேவதை, இந்த அரைநாணு"வென்று மூன்றுதடவை உச்சரித்து, வலது பக்கத்திலிருந்து இடதுபக்கமாக மூன்றுதடவை அரையில் சுற்றவேண்டியது. ஓர் முடியாவது மூன்றாவது ஐந்தாவது இருக்கலாம்.

பிறகு யக்ஞோபவீதத்தை உபாத்யாயர் கையிலெடுத்து, "நீயே யக்ஞோபவீதம்; யக்ஞோபவீதத்தை நீ தரிக்கும்படி செய்கிறேனெ"ன்ற மந்த்ரத்துடன் சிஷ்யனுடைய தோளில் வைக்கவேண்டும். பிறகு இருவர்களும் கைகளில் ஜலத்தை எடுத்துக்கொண்டு, உபாத்யாயர் சிஷ்யனை "உன் பெயரென்னவெ"ன்று கேட்கவேண்டும். "ஸ்வாமீ! நான் இன்னனெ"ன்று சிஷ்யன் சொல்லவேண்டும். "என் ப்ரவரரிஷிகள் உனக்கும் ப்ரவரரிஷிகளாவெ?"ன்று உபாத்யாயர் கேட்கவேண்டும். "தங்களுடைய ப்ரவரரிஷிகளே எனக்கும் ப்ரவரரிஷிகளெ"ன்று சிஷ்யன் சொல்லவேண்டும். "நீ சிஷ்யனென்று சொல்லெ"ன்று குரு கேட்கச், சிஷ்யன், "ஸ்வாமி! நான் சிஷ்யனெ"ன்று சொல்லவேண்டும். "பூர்புவஸ்ஸுவவெ"ன்று உபாத்யாயர் சிஷ்யனுடைய கைகளில் தன் கைகளால் மூன்றுதடவை ப்ரோக்ஷிக்கவேண்டும். பிறகு சிஷ்யனுடைய கைகளைத் தன் கைகளால் பிடித்துக்கொண்டு, "ஸவிதாதேவதையின் சக்தியாலும், அச்வினிதேவதைகளின் புஜங்களாலும், பூஷாவின் கைகளாலும், நான் உனக்கு உபதேசிக்கிறேனெ"ன்று சொல்லவேண்டும். அநேக சிஷ்யர்களை அபேக்ஷிக்கிறவர்களுக்கு ரிக்வேதம் II. 23, 1-வது மந்த்ரத்தையும், க்ஷத்ரியர்களுக்கு VIII. 21-வது மந்த்ரத்தையும், ரோகமுள்ளவர்களுக்கு மஹாவ்யாஹ்ருதிகளையும் சொல்லி உபதேசிக்கவேண்டும். பிறகு "பகன் உன் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்; ஸவிதா உன் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்; பூஷா உன் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்; அர்யமா உன் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். ந்யாயமாய் நீ மித்ரனென்ற தேவதை. அக்னியே உனக்கு உபாத்யாயர். ஓ, அக்னியே! இந்தச் சிஷ்யனை உன்னிடத்தில் ஒப்புவிக்கிறேன். ஓ, இந்த்ர! இந்தச் சிஷ்யனை உன்னிடத்தில் ஒப்புவிக்கிறேன். ஓ, ஸூர்ய! இந்தச் சிஷ்யனை உன்னிடத்தில் ஒப்புவிக்கிறேன். ஓ, விச்வதேவர்களே! இந்தச் சிஷ்யனை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேனெ"ன்று

சொல்லி, "இந்த்ரனைப்போல் நான் நடக்கிறேன். ஸூர்யனைப் போல் நான் நடக்கிறேனெ"ன்று தான் சொல்லிச் சிஷ்யனைச் சொல்லும்படிசெய்து, ப்ரதக்ஷிணஞ்செய்யவேண்டியது. தன் வலதுகையால் சிஷ்யனுடைய ஹ்ருதயத்தை அவனுக்குப் பின்னால் நின்றுகொண்டு, வலதுதோள் வழியாய்த் தொட்டு, "உன் சுத்தமான ஹ்ருதயத்திற்கு நான் வெகுப்ரியமுள்ளவனாயிருக்கக்கடவேனெ"ன்று மௌனமாய் அப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். சிஷ்யனுடைய ஹ்ருதயத்தின்மேல் தன் கையைவைத்து, "என் ஹ்ருதயத்தை என் இச்சைக்கு உட்படுத்துகிறேன். உன் மனஸ் என் மனஸின்படி நடக்கட்டும். என் வார்த்தையால் நீ மனப்பூர்வமாய் ஸந்தோஷிப்பாய். ப்ருஹஸ்பதி உன்னை என்னுடன் சேர்க்கட்டும். ராமனுடைய ப்ரஹ்மசாரியெ"ன்று ஜபித்து முன்போல் ப்ரதக்ஷிணஞ்செய்யவேண்டியது. பிறகு தன் வலதுகையால் சிஷ்யனுடைய வலது புஜத்தைத் தொட்டு "நீ சிஷ்யன். அக்னியில் ஸமித்துகளால் ஹோமஞ்செய். மலஜலங்களை விட்டபிறகு ஆசமனஞ்செய். குருவிற்குச் சுச்ருஷைசெய். பகலில் நித்ரை செய்யாதே. அக்னியில் ஸமித்துகளை ஹோமஞ்செய்யும்வரையில் மௌனமாயிரு" வென்று உபாத்யாயர் சொல்லச், சிஷ்யன் ஒவ்வொரு வாக்யத்திற்கும் பதில் சொல்லவேண்டியது. "ஓ, அக்னியே! இந்த ஸமித் உன்னுடையதெ"ன்று ஜபித்தாவது மௌனமாயாவது ஸமித்துகளை ஹோமஞ்செய்யவேண்டியது.

ஒருவர்ஷங்கழித்தாவது மூன்று ராத்ரிகள் கழித்தாவது அல்லது உடனேயாவது உபாத்யாயர் சிஷ்யனுக்கு ஸாவித்ரீயை உபதேசிக்கவேண்டியது. ப்ராஹ்மணனுக்கு ரிக்வேதம் III 62, 10-வது காயத்ரீ மந்த்ரத்தையும் (விச்வாமித்ரரிஷி கர்த்தா); க்ஷத்ரியனுக்கு I. 35, 2-வது த்ரிஷ்டுப் மந்த்ரத்தையும் (ஹிரண்யஸ்தூபரிஷிகர்த்தா); வைச்யனுக்கு IV. 40. 5-வது ஜகதீமந்த்ரத்தையாவது (வாமதேவர் கர்த்தா), 1. 35. 9-வது மந்த்ரத்தையாவது (ஹிரண்யஸ்தூபர் கர்த்தா) உபதேசிக்கவேண்டியது. ஆனால் ஸவிதாதேவதைக்கு ஏற்பட்ட எந்த மந்த்ரமாயாவதிருக்கலாம். அக்னிக்கு இடதுபாகத்தில் உபாத்யாயர் கிழக்குமுகமாயும், சிஷ்யன் மேற்குமுகமாயும் உட்கார்ந்துகொண்டு, சிஷ்யன், "ஸ்வாமீ! உபதேசிக்கவேண்டுமெ"ன்று கேட்க, உபாத்யாயர், "ஓமெ"ன்று சொல்லவேண்டும். சிஷ்யன், "ஸ்வாமீ! ஸாவித்ரீயைச் சொல்லுங்க

ளெ''ன்று கேட்க, உபாத்யாயர் ரிக்வேதம் III. 62, 10-வது மந்த்ரத்தைப் பாதம்பாதமாயும், பிறகு ஒரே தடவையிலும் சொல்லவேண்டியது. "ஜலங்களென்ற பெயரையுடையவர்கள்; ஸந்தோஷமானவர்களென்ற பெயரையுடையவர்கள்; ரஸமான வர்களென்ற பெயரையுடையவர்கள்; அழியாதவர்களென்ற பெயரையுடையவர்கள்; பயமில்லாதவர்களென்ற பெயரையுடைய வர்கள்; நாசமில்லாதவர்களென்ற பெயரையுடையவர்கள். இவ்விதமான உங்களை நான் பூஜிக்கிறேன். எனக்கு அநுக்ரஹஞ்செய்யுங்களெ''ன்ற மந்த்ரத்தைக் குரு மூன்றுதடவையுச்சரித்தும், சிஷ்யனையுச்சரிக்கச்செய்து, ரிக்வேதம் V. 51. 11—15-வது ஐந்து ரிக்குகளையும் உச்சரித்து, அவனுக்குத் தண்டத்தைக் கொடுக்க வேண்டியது. பிறகு அவனை அக்னியை ப்ரதக்ஷிணஞ்செய்வித்து, அந்த க்ராமத்தில் பிக்ஷையெடுத்துவரும்படி அனுப்பவேண்டியது. முதலில் தன் மாதாவிடத்திலாவது, இல்லையென்று சொல்லாத ஒரு ஸ்த்ரீயிடத்திலாவது பிக்ஷைகேட்கவேண்டியது. அப்படி எடுத்த பிக்ஷையைக் குருவிற்குத் தெரிவித்து, அவருடைய அநுமதியால் அதைச் சிஷ்யன் புஜிக்கவேண்டியது. ப்ரதிதினமும் அக்னியில் ஸமித்துகளால் ஹோமஞ்செய்வதும், பிக்ஷைக்குப் போவதும், பூமியில் படுப்பதும், குருவிற்குச் சுச்ரூஷைசெய்வதும் சிஷ்யனுடைய நித்யதர்மங்கள்.

குருவிடத்தில்வேதாத்யயனஞ்செய்து முடிந்தபிறகு, சிஷ்யனை விருஷபத்தின் தோலின்மேல் உட்காரச்செய்து, அவனுடைய தலைமயிர் தாடி தேஹத்திலிருக்கும் மயிர் நகங்கள் முதலியவைகளை க்ஷவரஞ்செய்து, அரிசி பருப்பு எள் கடுகு அபாமார்க்கம் ஸதா புஷ்பியென்ற புஷ்பங்களுடன் அவைகளைக் கலந்து, தூரத்தில் போட்டுவிட்டுச், சிஷ்யனுக்கு ஸ்நானஞ்செய்வித்து, ரிக்வேதம் X. 9-வது ஆபோஹிஷ்டீய ஸூக்தத்தால் ப்ரோக்ஷணஞ்செய்து அவனையலங்கரித்து, ஷை I. 152, 1-வது மந்த்ரத்தையுச்சரித்து, இரண்டு வஸ்த்ரங்களைத் தரிக்கும்படிசெய்து, வாஜஸனேயிஸம்ஹிதை XXXIV 50-ஐ உச்சரித்து, ஓர் தங்க ஆபரணத்தை அவனை அணிந்துகொள்ளும்படி செய்யவேண்டியது. பிறகு ரிக்வேதம் X. 128, 1-வது மந்த்ரத்தையுச்சரித்து, அவனுடைய தலையை மூடவேண்டியது. I. 123. 4-வது மந்த்ரத்தை ஜபித்து குடையையும், X. 18. 6-ஐ யுச்சரித்து பாதரக்ஷைகளையும், VIII. 17.

10-ஐ யுச்சரித்து மூங்கில் தண்டத்தையுமெடுத்துக்கொண்டு அந்த தினம் முழுவதும் சிஷ்யன் தனியாய் உட்கார்ந்திருக்கவேண்டும். பிறகு ரிக்வேதம் VI. 47. 26; X 152, 1-வது மந்த்ரங்களையுச்சரித்து, ரதத்தில் ஏறவேண்டியது. வீட்டிற்கு வருவதற்குமுன் தனக்குப் பசுவையாவது வெள்ளாட்டையாவது பக்வஞ்செய்து அர்க்யம் கொடுக்கக்கூடியவிடத்திற்குப் போகவேண்டும். அல்லது பசுக்களிருக்குமிடத்திலிருந்தாவது, பழங்களையுடைய மரத்தடியிலிருந்தாவது புறப்படவேண்டியது. தன் வீட்டிற்கு வந்து சேர்ந்து, ரிக்வேதம் II. 21. 6; I. 22. 15-வது மந்த்ரங்களையுச்சரித்து, ரதத்திலிருந்து இறங்கவேண்டும். அன்று தனக்கு ப்ரியமான ஆஹாரத்தைப் புஜிக்கவேண்டும்.—சாங்காயனகிருஹ்ய ஸூத்ரம். ப்ராஹ்மணனுக்கு மங்களமான பெயரிடவேண்டும்; க்ஷத்ரியனுக்கு பலத்தையுடைய பெயரிடவேண்டும்; வைச்யனுக்கு ஐச்வர்யத்தையுடைய பெயரிடவேண்டும்; சூத்ரனுக்கு வணக்கத்தையுடைய பெயரிடவேண்டும். இவை முறையே ஸுகம் ரக்ஷணம் ஐச்வர்யம் சுச்ரூஷையென்ற அர்த்தங்களைக் கொடுக்கவேண்டும். ஸ்த்ரீகளுக்கு வைக்கும் பெயர் ஸுலபமாய் உச்சரிக்கக் கூடியதாயும், கேட்பதற்கு வெறுப்பில்லாமலும், தெளிவான அர்த்தமுடையதாயும், மங்களகரமாயும், தீர்க்கமான உயிரெழுத்தில் முடிவதாயும், ஆசிர்வாதத்தைப்போல் மிருதுவாயுமிருக்கவேண்டும்—மனுஸ்மிருதி.—II.

ஜாதகர்மம் நாமகரணம் அன்னப்ராசனம் சூடாகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களால பிதாவின் வீர்யத்தாலும் மாதாவின் கர்ப்பத்தாலும் உண்டாகும் பாபமும் குற்றங்களும் நீங்குகின்றனவென்று யாக்ஞவல்க்யஸ்மிருதி I. 13ல் சொல்லியிருக்கிறது. மாதாபிதாக்கள் பரஸ்பரம் ஆசையால் புத்ரனை உண்டுபண்ணுகிறார்கள். கர்ப்பத்திலிருந்து அவன் பிறப்பது ஸ்தூலஜன்மம். ஆனால் விதிப்படி வேதங்களைக் கரைகண்ட ஆசார்யன் ஸாவித்ரீமந்த்ரத்தையுபதேசித்து, எந்த ஜன்மத்தைக் கொடுக்கிறரோ அதே வாஸ்தவமான ஜன்மம். அதற்கு விகாரமில்லை; நாசமில்லை.—மனுஸ்மிருதி. II. 147. யக்ஞோபவீதத்தின் மூன்று வடங்களும் ஸத் சித் ஆநந்தம்; ஸத்வரஜஸ்தமஸ்; ப்ரஹ்மா விஷ்ணு மஹேச்வரன்; பூ: புவ: ஸ்வ:; மனஸ் வாக், காயம் முதலிய த்ரிபுடிகளைக் குறிக்கின்றன. யக்ஞோபவீதத்தைத் தரிப்பவன் மனோவாக்காயங்களை அடக்

கவேண்டியது. மூன்று கணுக்களுள்ள தண்டமும் இதையே குறிக்கின்றது.—மனுஸ்மிருதி 12.

சிஷ்யன் வேதாத்யயனஞ்செய்தபிறகு வ்ரதங்களை முடித்துக் குருதக்ஷிணைகொடுத்து, அவருடைய அனுமதி பெற்றுத் தன் வீட்டிற்குத் திரும்பிவரவேண்டும்.

ப்ரஹ்மதேஜஸை விரும்பும் ப்ராஹ்மணனுக்கு ஐந்தாவது வயதிலும், பலத்தை விரும்பும் க்ஷத்ரியனுக்கு ஆறாவது வயதிலும் தனத்தை விரும்பும் வைச்யனுக்கு எட்டாவது வயதிலும் உபநயனம் செய்யவேண்டியதென்ற விதிப்படி, தசரதபுத்ரர்களுக்கு ஆறாவது வயதில் உபநயனம் செய்யப்பட்டது. [ஆ. ரா. II. 26. 27].

ப்ரஹ்மசர்யம் முடிந்தவுடன் அவர்கள் மந்த்ரிபரிவாரஜேனைகளுடனும் வஸிஷ்டமஹர்ஷியுடனும் ஆறுமாஸங்கள்வரையில் தீர்த்தயாத்ரை செய்தார்கள். [ஆ. ரா. II. 29. 30].

23. யானையேறுவதிலும்:—ஒவ்வொரு ஆர்யனும் அப்யஸிக்கவேண்டிய வித்யைகள் 32. கலைகள் 64. ரிக்யஜுஸ்ஸாமம் அதர்வமென்ற வேதங்கள்; ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், தந்த்ரங்களென்ற உபவேதங்கள்; சிக்ஷை, வ்யாகரணம், கல்பம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தஸென்ற வேதாங்கங்கள்; மீமாம்ஸை, தர்க்கம், ஸாங்க்யம், வேதாந்தம், யோகமென்ற தர்சனங்கள்; இதிஹாஸங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், நாஸ்திகமதம், அர்த்தசாஸ்த்ரம், காமசாஸ்த்ரம், சில்பசாஸ்த்ரம், அலங்காரசாஸ்த்ரம், காவ்யங்கள், தேசபாஷை, ஸமயோசிதமான வார்த்தைகள், யவனமதம், தேசதர்மங்களென்று வித்யைகள் 32.

(1) நவரஸங்களையும் பாவங்களையும் அங்கசேஷ்டைகளால் வெளிப்படுத்தும் நர்த்தனம். (2) நானாவாத்யங்களின் குணதோஷங்களிலும் அவைகளை வாசிப்பதிலும் பயிற்சி. 3. ஸ்த்ரீபுருஷர்களுக்கு வஸ்த்ரங்களாலும் பூஷணங்களாலும் அலங்கரிப்பது 4. நானாரூபங்களின் லக்ஷணங்களையும் மாறுதல்களையும் அறிவது. 5. படுக்கைகளை யலங்கரித்து, விரிப்புகளை விரித்துப், புஷ்பமாலைகளைக் கட்டுவது. 6. சூது சொக்கட்டான் முதலிய விளையாட்டுகளால் காலங்கழிப்பது. 7. வாத்ஸ்யாயன தந்த்ரத்தின்படி ரதிகேளியின் ரஹஸ்யங்களை யறிந்து அனுபவிப்பது. 8. தேன் மத்யம் முதலிய பானங்களை இறக்கிச்சேர்த்துக்கூட்டுவது. 9. அம்பு முதலிய ஆயுதங்களைத் தேஹத்திலிருந்தெடுப்பது; காயங்களை ஆற்றுவது. 10. பலவித ரஸங்களைக்

கலந்து, அன்னங்களைப் பக்வஞ்செய்வது. 11. மரங்களை விதம் விதமாய்ப் புஷ்பிக்கும்படிக்கும் பழுக்கும்படிக்கும் சிகித்சைசெய்து வளர்ப்பது. 12. கருங்கல் முதலிய தாதுக்களை உடைப்பது, பொடியாக்குவது. 13. கருப்பஞ்சாற்றிலிருந்து பலவிதமான பானங்களையும் வஸ்துக்களையும் செய்வது. 14. ஓஷதிகளையும் மருந்துச் சரக்குகளையும் கலப்பது. 15. சரக்குகளைச் சேர்த்துப் பிரிப்பது, பதார்த்தங்களைச் சேர்ப்பதற்குமுன், அவைகளை உபயோகிக்குந்திறமை. 17. பதார்த்தங்களிலிருந்து உப்புகளையெடுப்பது. 18. சரங்களைத்தொடுத்து விடுப்பது; அடிவரிசைகளைப்போடுவது. 19. மல்லயுத்தம். 20. குறிப்பிட்ட விடத்தில் யந்த்ரங்களையும் அஸ்த்ரங்களையும் ப்ரயோகிப்பது. 21. ரணவாத்யங்களுக்கு ஒத்துப் படைகளை அணிவகுப்பது. 22. யானை குதிரை ரதங்கள் முதலியவைகளை நடத்தி, யுத்தஞ்செய்வது. 23. பலவித ஆஸனங்களாலும் முத்ரைகளாலும் தேவதைகளைத் திருப்திசெய்வது. 24. ரதமோட்டுவது, யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளுக்கு நடை பழக்குவது. 25. மண் மரம் கல் முதலியவைகளால் பாத்ரங்களைச் செய்வது. 26. சித்ரமெழுதுவது. 27. தடாகம் ஓடை அரண்மனை முதலியவைகளை அமைப்பது. 28. ஏற்றம் முதலிய யந்த்ரங்களையும் வாத்யங்களையும் செய்வது. 29. நானாவர்ணங்களை அழகாய்க் கலப்பது. 30. ஜலம் வாயு அக்னி முதலியவைகளைச் சேர்ப்பது, தடுப்பது. 3'. படகு கப்பல் ரதம் முதலிய வாஹனங்களைச் செய்வது. 32. நூல் கயிறு முதலியவைகளைச் செய்வது. 33. நெசவு. 34. ரத்னங்களைப் பரீக்ஷிப்பது, அவைகளுக்குத் துளையிடுவது. 35. தங்கம் முதலிய உலோகங்களின் நிஜஸ்வரூபத்தையறிவது. 36. தங்கம் ரத்னம் முதலியவைகளைப்போல உண்டுபண்ணுவது. 37. தங்கத்தால் அலங்கரிப்பது, மிலாம் பூசுவது. 38. தோல்களைப் பதனிடுவது. 39. மிருகங்களின் தோல்களையும் அங்கங்களையுமெடுப்பது. 40. பால்கறப்பது, கடைவது, உருக்குவது. 41. ரவிக்கை பாவாடை சட்டை முதலியவைகளைத் தைப்பது. 42. கைகளால் ஆறு குளம் முதலியவைகளை நீந்திக் கடப்பது. 43. வீடுகளையும பாத்ரங்களையும் சுத்திசெய்வது. 44 வஸ்த்ரங்களை அழுக்கெடுப்பது. 45. க்ஷவரஞ்செய்வது. 46. எள் மாம்ஸம் முதலியவைகளிலிருந்து எண்ணெய் இறக்குவது. 47. பிறருடைய மனவின்படி நடந்து அவர்களை வசப்படுத்துவது. 48. பூமியையுழுவது, மரங்களிலேறுவது. 49. மூங்கில் புல் முதலியவைகளால்

பாத்ரங்களைச் செய்வது. 50. கண்ணாடி பீங்கான் முதலியவைகளால் பாத்ரங்களைச் செய்வது. 51. ஜலத்தை இழுப்பது; தெளிப்பது. 52. அஸ்த்ரங்கள் ஆயுதங்கள் யந்த்ரங்கள் முதலியவைகளைச செய்வது. 53. யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளுக்கு ஜேணங்களைச் செய்வது. 54. குழந்தைகளை வளர்ப்பது, சிகித்ஸை செய்வது, விளையாட்டுப்பழக்குவது. 55. அபராதிகளை யுக்தமாய் அடித்துத் தண்டிப்பது. 56. அநேக தேசபாஷைகளை அழகாய் எழுதுவது. 57. தாம்பூலத்தைத் தயார்செய்வது; காப்பாற்றுவது முதலியவை கலைகள்.

32. ராமனுக்குத் தக்ஷிணபுஜமான லக்ஷ்மணனில்லாமல் எப்படிப் புஜிக்கமுடியும்? ப்ராணனான லக்ஷ்மணனில்லாமல் எப்படித் தூங்கமுடியும்?

78. 6. ஆநந்தமடைந்தார். தன்னை ஆராதித்த தசரதருடைய மனோரதங்களைப் பூர்த்திசெய்வதே இந்த அவதாரமெடுத்ததற்கு முக்ய ப்ரயோஜனம்.

(ராமன் ஒவ்வொரு கல்பத்திலும் மனுஷ்யாவதாரஞ்செய்யும்பொழுது புஸுண்டரென்ற யோகி அயோத்யையில் பிறப்பார். ஒருநாள் ராமன் அரண்மனையில் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, காக்கை ரூபமுடைய புஸுண்டரைப் பிடிப்பதற்காகக் கையை நீட்டினார். புஸுண்டர் பறந்தோடினார். ராமனுடைய கை பின்தொடர்ந்தது. எங்கே பறந்தாலும் இரண்டு விரல்கடை தூரத்தில அந்தக்கை தொடர்ந்துகொண்டே வந்தது. ப்ரபஞ்சத்தின் எல்லைவரையிலும் போயும் அந்தக்கை பின்தொடர்ந்தது. புஸுண்டர் பயந்து, கண்களை மூடித்திறக்க, மறுபடியும் அயோத்யையில் தானிருப்பதைக்கண்டார். ஒன்றுந்தோன்றாமல் ப்ரமித்து நிற்கையில் ராமன் கைகொட்டிச் சிரித்தார்; புஸுண்டர் அவருடைய வாயில் நுழைந்து வயிற்றிற்குள் சென்றுபார்க்கையில், எண்ணிறந்த ப்ரஹ்மாண்டங்களையும் த்ரிமூர்த்திகளையும் ராமகிருஷ்ணாதி அவதாரங்களையும் தேவர்களையும் அஸுரர்கள் முதலிய ஸமஸ்த ஸ்ருஷ்டிகளையும் கண்டார். அங்கே அநேக கல்பங்கள் வஸித்துப் பிறகு வெளியில் வந்தார். இவையெல்லாம் இரண்டுநாழிகைக்குள் நடந்தனவென்றறிந்து திகைத்து நிற்க, ராமன் சிரித்து அந்த மாயையை விலக்கிப், புஸுண்டருக்குத் தீர்க்காயுளை அநுக்ரஹித்தார்.—ராமசரித்ரமானஸம் — உத்தரகாண்டம்).

21. யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது:—ஸ்ரீராமசந்த்ரனுக்கு உபநயனஸம்ஸ்காரமானபிறகு, தீர்த்தயாத்ரைசெய்ய வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. தசரதருடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு, திவ்யதேசங்களிலும் புண்யதீர்த்தங்களிலும் தங்கி ஆனந்தமாய்க் காலத்தைக் கழித்து, அயோத்யைக்குத் திரும்பிவந்தார். கொஞ்சகாலங்கழித்து, அகஸ்மாத்தாய் அவருக்கு ஸகல விஷயங்களிலும் வெறுப்புண்டாய் நித்ய நைமித்திககர்மங்களை வெகு அச்ரத்தையாய்ச் செய்துவந்தார். அப்பொழுது விச்வாமித்ரர் தன் யாகரக்ஷணத்திற்காக ராமனை அனுப்பும்படி தசரதரை ப்ரார்த்தித்தார். மஹாராஜா தன் புத்ரனை அழைத்துவரும்படியனுப்ப, ராகவன் முகம்வாடித் தேஹம் மெலிந்து கண்கள் காந்திமழுங்கி ராஜஸபைக்கு வந்தார். வழக்கப்படி தன் பிதாவின்மடியில் உட்காராமல் தரையில் வஸ்த்ரத்தை விரித்து உட்கார்ந்தார். அதைக் கண்டவுடன் தசரதருக்கும் வஸிஷ்டருக்கும் விச்வாமித்ரருக்கும் வருத்தமும் ஆச்சர்யமும் மேலிட்டன. ஸகல மனோரதங்களையும் குறைவில்லாமல் பூர்த்திசெய்யக்கூடிய செல்வமும் அதிகாரமும் பொருந்தின ரகுநாதனுக்கு இவ்விதமான சோகம் நேர்ந்த காரணமென்னவென்று விச்வாமித்ரர் கேட்க, ராமன் செல்வம் ஆயுள் அஹங்காரம் மனஸ் ஆசை பால்யம் யௌவனம் காமம் கிழத்தனம் காலம் ஸம்ஹாரசக்தி ஸாதுஸங்கம் முதலியவைகளின் ஸ்வபாவத்தை வர்ணித்து, அவை நிலையற்றவையென்றும் துக்கத்திற்குக் காரணமென்றும் உருக்கமாயும் தெளிவாயுமெடுத்துச் சொன்னார். ஆகாசவீதியில ஸஞ்சரிக்கும் ஸித்தகணங்கள் அதைக்கேட்டு, "வெகுகாலமாய் நம்மைப் பிடித்திருக்கும் அக்ஞானமும் ஸந்தேஹங்களும், இன்று ராமனுடைய கேள்விகளுக்கு இந்த மஹர்ஷிகள் சொல்லும் மறுமொழிகளால் நீங்கி நமக்கு ஞானோதயமாகுமே"ன்று தசரதருடைய ஸபைக்கு வந்து, அங்கிருந்தவர்களால் உபசரிக்கப்பட்டுத் தருந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது விச்வாமித்ரர் வஸிஷ்டரை நோக்கி, "நம்மிருவர்க்கும் நேர்ந்த விரோதத்தைப் போக்கி சாந்தியைப் பெறும்படி உமது பிதாவான சதுர்முகர் உபதேசித்த ஞானபரமான உபாக்யானங்களை ராமனுக்குச் சொல்லி ஸகல ஸம்சயங்களையும் நீக்குமே"னார். அந்த ஸமயத்தில்செய்த ஞானோபதேசமே யோகவாஸிஷ்டமெனப்படும்.—யோகவாஸிஷ்டம். வைராக்யப்ரகரணம்.

22. விச்வாமித்ரர் :—65-வது ஸர்க்கம் ச்லோகங்களைப் பார்க்க.

79-10. விசாரித்தார்:—அயோத்யாகாண்டம் 100-வது ஸர்க்கத்தின் ச்லோகங்களைப்பார்க்க.

80-9. மனஸ்வி:—தாராளமான மனதையுடையவர்.

30. ராமனை:—விச்வாமித்ரர் ராமனையும் லக்ஷ்மணனையும் தன்னுடன் அனுப்பும்படி தசரதரைக்கேட்டார். [ஆ. ரா. III. 2]

81-8. நானறிவேன்:—"கோடிஸூர்யப்ரகாசத்துடன் இருட்டிற்கப்பால் ப்ரகாசிக்கும் இந்த மஹாபுருஷனை அறிவேன்.—புருஷஸூக்தம்.

நான் அநேக குருக்களை உபாஸித்து ப்ரஹ்மஜ்ஞானத்தை அடைந்திருக்கிறேன். யோகபலத்தால் பராபரதத்வங்களை ஸாக்ஷாத்காரஞ்செய்திருக்கிறேன். நீர் கேவலம் கர்மகாண்டத்தை ஆசரிக்கிறவர். நான் மரவுரி மான்தோல் ஜடை முதலியவைகளைத் தரித்துப் பழங்களையும் கிழங்குகளையும் வேர்களையும் இலைகளையும் சருகுகளையும் காற்றையும் புஜித்துக் காமக்ரோதங்களை ஜயித்தவன்; நீர் ஸகல போகபோக்யங்களையும் அநுபவித்துக் கொண்டு, காமக்ரோதங்களுக்கு வசப்பட்டவர். நான் ஸாத்விக ப்ரகிருதியுள்ளவன்; நீர் ராஜஸப்ரகிருதியுள்ளவர். நான் ராமனுடைய கர்ப்பத்தில் பிறந்த சிசுவைப்போன்றவன் (பக்தியால் அவருக்குப் புத்ரன்); நீர் அவரை உமது புத்ரனென்று பாவிக்கிறவர். நான் மோக்ஷத்திற்காக யாகஞ்செய்கிறவன்; நீர் லௌகிக ஸுகத்தை அபேக்ஷித்து யாகங்களைச் செய்கிறவர். நான் தர்மமோக்ஷங்களென்ற புருஷார்த்தங்களை நாடுகிறவன்; நீர் அர்த்தகாமங்களை நாடுகிறவர். 'வேதமே தனக்குத் தெரியாதென்று கைவிட்ட பரம்பொருளை நீர் அறியமுடியுமோ'வென்றால், அவரை மஹாத்மாவென்றும், அளவற்ற மஹிமையுடையவரென்றும் அறிவேன். புருஷஸூக்தவாக்யத்தில் 'இந்த'என்ற ஸௌலப்யத்தைக்காட்டும் பதத்திற்கு 'ராமனை'யென்ற பதமும் 'புருஷனை'யென்ற பதத்திற்கு 'வீண்போகாத பராக்ரமமுள்ள'என்ற பதமும் பொருந்தும். அரசனுக்கு வெண்குடையும் சாமரங்களும் எப்படி இயற்கையாயுள்ள

ஸம்யோ அப்படிப் பகவானுக்குப் பரத்வமும் ஸௌலப்யமும் ஸ்வபாவகுணங்கள்.

10. வஸிஷ்டமஹர்ஷியும்:—"வஸிஷ்டர் தங்களுக்கு வம்ச பரம்பரையாய் ஆசார்யர்; தங்களுடைய ஹிதத்தையே தேடுகிறவர்; எனக்கு வெகுகாலம் விரோதியாயிருந்தவர்; என்னிடத்தில் பக்ஷ பாதம்வைத்துப் பொய்சொல்லமாட்டார்; ப்ரஹ்மபுத்ரர்; யோ கத்திற்கும் ஞானத்திற்கும் எல்லை. அவர் என்னை ப்ராஹ்மரிஷி யென்று ஒப்புக்கொள்வதை நான் புருஷார்த்தமாய் அபேக்ஷித்த வன். 'ஸத்யத்தைப் பேசு. தர்மத்தை நடத்து' என்ற வேதோப தேசங்களைத் தங்களுக்குச் செய்து, தானும் நடத்திக்காட்டுகிறவர். ஆனால் 'ப்ராஹ்மணனுக்கும் இதர ஜாதியார்களுக்கும் விவாதம் ஏற்பட்டால ப்ராஹ்மணனுக்கே அநுகூலமாய் முடிவுசெய்ய வேண்டியதெ'ன்ற ந்யாயப்படி, உமக்குமெனக்கும் நடக்கும் விவா தத்தில் உமிடத்தில பக்ஷபாதமாய்ப் பேசுவாரென்றால், ராஜ ஸபைகளில் போகவேண்டிய அவச்யமில்லாமல் இஷ்டப்படி ஸஞ் சரிக்கும் இந்தத் தபஸ்விகளையும கேளுங்கள். இவர்கள் பக்ஷபாத மற்றவர்கள். 'அந்தப பரமாத்மாவின் உதபத்தியை அறிகிறார்க ளெ'ன்ற புருஷஸூக்த வசனப்படி ராமனுடைய அவதாரரஹஸ் யத்தையறிந்தவர்கள். புலஸ்த்யர் அகஸ்த்யரென்று லோகாசார் யர்களாய் விளங்குகிறவாகள். கர்ப்பத்திலேயே ப்ரஹ்மஞா னத்தையடைந்த வாமதேவர், ஏழுகல்பங்களாய் ஜீவித்திருக்கும் மார்க்கண்டேயர் முதலிய ப்ராஹ்மரிஷிகளும், எப்பொழுதும் ப்ரஹ்மத்யானத்திலேயே லயித்திருக்கிறவர்களும் உமக்கு இது ஹிதமென்று சொன்னால் நீர் செய்யலாமல்லவா?

82-2. பதினாறு வயஸ்:—அப்பொழுது ராமனுக்குப் பன்னி ரண்டு வயஸ். "அந்தக குழந்தை பன்னிரண்டுவயஸ் பாலன்; அஸ்த்ரபரிசயமில்லாதவனெ"ன்று மாரீசன் ராவணனிடத்தில் சொல்லியிருக்கிறான். பதினாறு வயஸ் நிறைந்தவுடன், கவசந்தரி த்து யுத்தஞ்செய்ய யோக்யதையுண்டாகும்.

தாமரைப்புஷ்பம்:—ஸூர்யனுள்ளவரையில் மலர்ந்து அழகு பொருந்தி, ஸூர்யன் அஸ்தமித்தவுடன் மூடிக்கொள்வதுபோல் ராமனுடைய நேத்ரங்கள் அஸ்தமித்தவுடன் மூடிக்கொள்ளும். ராக்ஷஸர்களோ ராத்ரியில வரவர விருத்தியாகும் பலபராக்ரமங் களுடன் ஸஞ்சரித்து யுத்தஞ்செய்பவர்கள்.

8. அக்ஷௌஹிணீ:—

தசம்	=	10
சதம்	=	100
ஸஹஸ்ரம்	=	1,000
அயுதம்*	=	10,000
நியுதம்	=	100,000
ப்ரயுதம்	=	1,000,000
அர்புதம்	=	10,000,000
நியர்புதம்	=	100,000,000
விருந்தம்	=	1,000,000,000
பத்மம்	=	10,000,000,000
கர்வம்	=	100,000,000,000
நிகர்வம்	=	1,000,000,000,000
சங்கம்	=	10,000,000,000,000
பத்மம்	=	100,000,000,000,000
ஸமுத்ரம்	=	1,000,000,000,000,000
மத்யமம்	=	10,000,000,000,000,000
பரார்த்தம்	=	100,000,000,000,000,000

(வாயுபுராணம்)

83. 9. மாரீசன் - 305 வது பக்கத்தில் நோட்டைப் பார்க்க.

85. 31. மங்களகரமான மந்த்ரங்களால்:—வா. ரா. அயோத்யாகாண்டம், 25 வது ஸர்க்கத்தைப் பார்க்க. "ஸ்வஸ்திஜுமி ... காம" என்ற மந்த்ரங்களால்—கோவிந்தராஜீயம்.

யோகவாஸிஷ்டத்தில் சொன்னபடி ஆகமதத்வத்தைப் போதிக்கும் உபதேசங்களால்— திலகம்.

31. ஆசீர்வாதஞ்செய்தார்:—த்ரோணர் துர்யோதனனை யுத்தத்திற்கு அனுப்பும்பொழுது அவனுக்கு அர்ஜுனனால் யாதொரு கெடுதியும் நேராமலிருப்பதற்காக, ஆசமனஞ்செய்து, சில மந்த்ரங்களை உச்சரித்து, ஓர் கவசத்தைத் தரிக்கும்படி சொல்லி, "ப்ரஹ்மாவும் ப்ராஹ்மணர்களும் [illegible]ரும் ஜந்துக்களில் ச்ரேஷ்டமானவைகளும் உனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். யயாதி நஹுஷன் துந்துமாரன் பகீரதன் முதலிய ராஜர்ஷிகள் உனக்கு ஹிதத்தைச் செய்யட்டும்; ஒரு பாதமுள்ள ஜந்துக்களாலும், அநேக பாதங்களை

யுடைய ஜந்துக்களாலும், பாதங்களில்லாத ஜந்துக்களாலும் உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸ்வாஹாவும் ஸ்வதாவும் சசீயும் லக்ஷ்மீயும் அருந்ததீயும் உனக்கு மங்களத்தைச்செய்யட்டும். அஸிதர்தேவலர் விச்வாமித்ரர் அங்கிரஸ் வஸிஷ்டர் கச்யபரென்ற ரிஷிகள் உனக்கு மங்களத்தைச்செய்யட்டும். தாதா விதாதா திக்குகள் திக்பாலர்கள் கார்த்திகேயரென்றவர்கள் உனக்கு எப்பொழுதும் மங்களத்தைச்செய்யட்டும். ஸூர்யன் யமன் திக்கஜங்கள் பூமி ஆகாசம் க்ரஹங்கள் ஸித்தர்கள் முதலியவர்கள் உனக்கு எப்பொழுதும் மங்களத்தைச்செய்யட்டு''மென்று ஆசீர்வதித்தார்—பாரதம், த்ரோணபர்வம் 94.

86. 14. செல்லும்பொழுது:—ராமன் விச்வாமித்ரருடன் சென்றபொழுது இலையுதிர்காலம்—பட்டிகாவ்யம்.

"கருடபகவான் ஒருவர்க்குந்தெரியாமல் ராமனுக்கு விஷ்ணுவின் வில்லையும் மூன்று அஸ்த்ரங்களையும் கொடுத்துவிட்டுப்போனார்"—பாத்மபுராணம். தாடகையையும் ஸுபாகுவையும் கொல்வதற்காகவும், மாரீசனை ஸமுத்ரத்தில் தள்ளுவதற்காகவும் இவை கொடுக்கப்பட்டன. ஸாதாரண அஸ்த்ரசஸ்த்ரங்களால் இது முடியாது.

21. ஸ்கந்தர் விசாகர்: "அப்பொழுது பகவான் ஸ்கந்தர் விசாகர் நைகமேஷர் சாகரென்ற நான்கு மூர்த்திகளாய் விளங்கினர்."—பாரதம். "இவர்கள் அக்னியிலிருந்துண்டானவர்கள்."

3. பலா அதிபலா: விச்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களுக்கு 'ஜயா விஜயா'வென்ற வித்யைகளை உபதேசித்தார்—பட்டிகாவ்யம்

காமாச்ரமத்திற்குப் போகும்வழியில் விச்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களுக்கு மஹேச்வரவித்யை, தனுர்வித்யை, அஸ்த்ரவித்யை, ரதவித்யை, கஜவித்யை, அச்வவித்யை, கதாவித்யை, அஸ்த்ரங்களை ப்ரயோகிப்பதற்கும் திருப்புவதற்குமுரிய மந்த்ரங்கள், பசி தாஹம் சரமங்களைப்போக்கும் பலை அதிபலையென்ற மந்த்ரங்களையும் உபதேசித்தார். [ஆ. ரா. III. 4-7.]

பலை அதிபலையென்ற மந்த்ரங்களுக்கு விராட்புருஷன் ரிஷி; காயத்ரீ தேவதை; காயத்ரீ சந்தஸ்; அகார உகார மகாரங்கள் பீஜம் முதலியவை; பசி தாஹம் முதலியவைகளைப் போக்குவதற்கு ப்ரயோகஞ்செய்யப்படும். க்லாம் என்ற முறையேஅங்கன் யாஸ கரன்

யாஸங்கள். "பலை அதிபலையென்ற வித்யைகளின் தேவதைகளை த்யானஞ்செய்கிறேன்; அவை ப்ரணவத்தின் மாறுதல்கள்; ஸூர்யனைப்போன்ற தேஹகாந்தியையுடையவை; ஸகல வேதங்களின் ஸாரம்; அளவற்ற ப்ரகாசமுள்ளவை; சத்ருக்களை வதஞ்செய்வதிலும், அவர்களுடைய சக்தியை அபஹரிப்பதிலும் ஸமர்த்தர்கள்; எப்பொழுதும் அம்ருதம் பெருகிக்கொண்டிருக்குங் கைகளையுடையவை; ஸகல ப்ராணிகளுக்கும் உயிரைக்கொடுக்கக் கூடியவையெ"ன்று த்யானம். இவைகளின் மூலமந்த்ரங்களையும் மற்ற விவரங்களையும் ஸாவித்ரீ உபநிஷத்தில் பார்க்க.

88-20. ஸரயூ:—முன் க்ருதயுகத்தில் சங்கனென்ற ஓர் தைத்யன் வேதங்களை அபஹரித்துக்கொண்டுபோய் ஸமுத்ரத்திலெறிந்துவிட்டு அங்கேயே மறைந்தான். அவனைக் கொல்வதற்காக பகவான் ஓர் பெரிய மத்ஸ்யரூபத்தைத் தரித்து, அந்த வேதங்களையெடுத்து ப்ரஹ்மாவிற்குக் கொடுத்தார். அப்பொழுது பகவானுடைய ஆநந்தபாஷ்பம் பெருகி ஹிமயமலையின் உச்சியில் விழுந்தது. அது ஓர் புண்யநதியாய் ஓடி பிந்துஸரஸில் கலந்து; அங்கிருந்து மானஸமென்ற ஸரஸில் வந்து தங்கிற்று. அப்பொழுது வைவஸ்வதமநு யாகஞ்செய்ய விரும்பித் தன் குருவைப்பார்த்து, "ஸ்வாமி! இந்த அயோத்யை ஸகல ஸௌக்யங்களும் பொருந்தியிருக்கிறது. இங்கே யாகஞ்செய்யலாமா?"வென்றார். அதற்குக் குரு, "இவ்விடத்தில் ச்ரேஷ்டமான நதியுமில்லை, புண்யதீர்த்தமுமில்லை. ஆகையால் பாதகங்களைப்போக்கும் ஓர் நதியை, மானஸஸரஸிலிருந்து இங்கே ஓடும்படி செய்"யென்றார். உடனே வைவஸ்வதமநு வில்லை வளைத்து, நாணேற்றி, ஓர் உத்தமமான பாணத்தை ப்ரயோகஞ்செய்ய, அது மானஸஸரஸில் ஓர் பக்கத்தையுடைத்தது. அங்கிருந்த தீர்த்தம் ஓர் நதியாய் அயோத்யைக்கருகில் ஓடிவந்தது. சரத்தின் வழியில் ஓடிவந்ததால் 'ஸரயூ'வென்றும், மானஸஸரஸிலிருந்து பெருகினதால் 'ஸரயூ'வென்றும் பெயருண்டாயிற்று. பிறகு ஸகரமஹாராஜாவின் 60,000-புத்ரர்களும் கபிலருடைய நேத்ராக்னியால் சாம்பலானபொழுது, பகீரதன் தேவலோகத்திலிருந்து கங்கையை வருவித்து ஸரயூவுடன் கலக்கச்செய்தார்.— ஆ. ரா. யாத்ராகாண்டம். 4.

34. செய்தார். பரமசிவன் ஹிமயமலையில் தபஸ்செய்துகொண்டிருக்கையில் மன்மதன் அவராலெரிக்கப்பட்டானென்று

சில புராணங்களில் சொல்லியிருப்பது வேறு கல்பங்களில் நடந்த விருத்தாந்தம்.

90. 33. பீமஸேனனுடைய திக்விஜயத்தில் மலதமென்ற தேசம் கிழக்குத்திக்கில் வஸிக்கும் ஜாதியாருடையதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

கரூஷம் விந்த்யமலையின் பின்பாகத்திலிருக்கிறது—வாயுபுராணம், மத்ஸ்யபுராணம்.

வைவஸ்வதமநுவின் புத்ரர்களில் ஒருவனாகிய கரூஷனுடைய ஸந்ததியார்கள் வஸிக்கும் தேசமென்று தெரிகிறது.

கங்கையின் தென்கரையில் கோமதியுடன் சேருமிடம்முதற்கொண்டு சோணையுடன் சேருமிடம்வரையில், அதாவது தற்காலத்து ஷாஹாபாத்ஜில்லாவென்பது, மலதர்கள் காரூஷர்களென்ற ஜாதியாரால் குடியேறப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஹேமசந்த்ரநிகண்டு IV. 25-லும், த்ரிகாண்டசேஷம் பூமிவர்க்கத்திலும் அவர்களுக்கு 'பிருஹத்க்ருஹர்கள், அதாவது பெரிய குகைகளில் வஸிப்பவர்களென்று பெயரிட்டிருக்கிறது. அதனால் அவர்கள் இந்தியாவில் ஆர்யர்கள் குடியேறுவதற்கு முன்னிருந்த ஜாதியாரென்றும், சோடாநாகப்பூர் நாட்டிலுள்ள மலைப்ரதேசங்களுக்குப் போனார்களென்றும், அங்கே இப்பொழுது வஸிக்கும் சில ஜாதியார்களின் பூர்விகர்களாயிருக்கலாமென்றும் தோன்றுகிறது. ஜராஸந்தன் மதுரையை முற்றுகையிட்டபொழுது, கரூஷதேசத்தரசன் அவனுக்கு ஸஹாயஞ்செய்தான்.—ஹரிவம்சம். 91. பிற்காலத்தில் கரூஷதேசம் மகதராஜ்யத்தில் கலந்துவிட்டது. "கரூஷதேசத்தரசன் கபடமுள்ளவன்; மஹாபலவான்; மாயையால் யுத்தஞ்செய்பவனென்"று பாரதம் II. 14. 12-லும், "மஹாபலவானை பாண்டவன் மத்ஸ்யதேசத்தார்களையும் மலதர்களையும் ஜயித்தானென்"று ௸ 30 8 லும் சொல்லியிருக்கிறது.—பூர்விகஆர்ய பூகோளம்.

19. 1. விருத்ராஸுரனை:—தன் புத்ரனை விச்வரூபன் இந்த்ரனால் கொல்லப்பட்டதைக்கண்டு த்வஷ்டா கோபங்கொண்டு, அவனைக் கொல்வதற்காக ஓர் அபிசாரஹோமஞ்செய்தான். அதில் ஆஹுதிகொடுக்கும்பொழுது முக்யமந்த்ரத்தை ஸரியான ஸ்வரத்துடன் சொல்லவில்லை. 'இந்த்ரனுக்குச் சத்ருவாய் நீ வளர்க்கடவாய்' என்பதற்குப் பதிலாக 'இந்த்ரனைச் சத்ருவாயுடையவனாய்

நீ வளரக்கடவாய்' என்று அர்த்தமாகும்படி உச்சரித்தான். அந்தப் பிசகால் அவனுடைய உத்தேசம் வீணாயிற்று. அக்னிகுண்டத்திலிருந்து ஓர் பயங்கரமான அஸுரன் உண்டானான். அவனுக்கு விருத்ரன் என்று பெயர். அவன் தேவர்களை எதிர்த்து நாசஞ் செய்ய ஆரம்பித்தான். அவர்கள் ப்ரயோகித்த ஆயுதங்களையெல்லாம் விளையாட்டாய் விழுங்கினான். அவர்கள் ப்ரமித்து மஹாவிஷ்ணுவிடத்தில் போய் முறையிட்டார்கள். பகவான், "நீங்கள் ததீசிமஹர்ஷியிடம் சென்று அவருடைய எலும்புகளை ப்ரார்த்தியுங்கள். அவைகளைக்கொண்டு விச்வகர்மா ஓர் ஆயுதத்தை உங்களுக்குச் செய்துகொடுப்பான். அதினால் விருத்ரனை ஸம்ஹரிக்கலாமெ"ன்றார் தேவர்கள் அப்படியே ததீசியிடம்சென்று, "ஸ்வாமி! ஸகல லோகங்களும் க்ஷேமமடையும்படி தாங்கள் அநுக்ரஹிக்கவேண்டு"மென்று ப்ரார்த்திக்க, அந்த மஹர்ஷி, "உங்களுடைய எண்ணத்தை அறிவேன். இந்தத் தேஹம் எப்பொழுதாவது மடியவேண்டியது. நான் இதுவரையிலுமெடுத்த எண்ணிறந்த தேஹங்கள் இப்படி பிறர்க்கு அளவற்ற க்ஷேமத்தைச்செய்யும்படியான காரியத்தைச் செய்யவில்லையே"என்று, பரமானந்தத்துடன் யோகமார்க்கத்தால் அந்தத் தேஹத்தை விட்டார். உடனே தேவர்கள் அவருடைய எலும்புகளை எடுத்து விச்வகர்மாவிடத்தில் கொடுக்க, அவன் முதுகெலும்பால் வஜ்ரமென்ற ஆயுதத்தைச்செய்து இந்த்ரனிடத்தில் கொடுத்தான்.

பிறகு தேவராஜனும் தேவகணங்களும் விருத்ராஸுரனுடன் யுத்தத்திற்குச் சென்று நெடுநேரம் சண்டையிட்டார்கள். தாங்கள் ஜயமடைவார்களென்று தோன்றிற்று; தைத்யர்களும் தானவர்களும் பின்வாங்கினார்கள். அதைக்கண்டு விருத்ரன், "தோழர்களே! என்ன ஆச்சர்யம்! யுத்தகளத்தில் வந்தபிறகும் பின்வாங்குகிறவர்களுண்டோ? ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. அளவற்ற கீர்த்தியையும் புண்யத்தையும் கொடுக்கக்கூடிய வழியைத் தேடவேண்டாமா? விசேஷ புண்யங்களைச் செய்து அவைகளின் பலரூபமாய் யோகக்ரமத்தால் ப்ராணன்களையடக்கி அந்தத் தேஹத்தை விடலாம்; அல்லது யுத்தகளத்தில் சத்ருக்களை எதிர்த்துப் பின்வாங்காமல் யுத்தஞ்செய்து அவர்களுடைய ஆயுதங்களால் உயிரை விடலாம். இவ்விரண்டும் புண்யாத்மாக்களுக்கே கிடைக்கு"மென்றான். அஸுரர்கள் அவனை லக்ஷ்யஞ்செய்யாமல் ஓடுவதைக்கண்டு, தேவர்

கள் அவர்களைத் துரத்தினார்கள். விருத்ரன் வெறுப்படைந்து, "பயந்தோடுகிறவர்களைத் துரத்தியடிப்பதில் என்ன பெருமை? என்ன கீர்த்தி? இதோ உங்களை எதிர்க்க வித்தமாய் இருக்கும் என்னுடன் யுத்தஞ்செய்யுங்களே"என்று இந்த்ரன்மேல் பாய்ந்தான். தேவராஜன் ஓர் கதாயுதத்தைச் சுழற்றி அவன்மேலெறிய, விருத்ரன் அதை இடதுகையால் பிடித்து ஐராவதத்தின் தலையில் ஓங்கி அடித்தான். அந்த வேகத்தால் அது 28 முழம் பின்வாங்கி ரக்தத்தைக் கக்கிற்று. அதைக்கண்டு விருத்ரன் மனமுருகி மறுபடியும் அதையடிக்கவில்லை. இந்த்ரனைப்பார்த்து அவன் செய்தபாப கிருத்யங்களை நினைத்து, "அடே! ப்ரஹ்மஹத்யா செய்தவனே! உனக்கு ஆசார்யரான விச்வரூபனைக் கொன்றாய். அவனிடத்தில் உபதேசம்பெற்று, அவன் உன்னை நம்பியிருக்கும்வேளையில், கபடமாய் அவன் தலையை அறுத்தாய். ராக்ஷஸர்களைக் காட்டிலும் நீ மஹாபாபி. இந்தச் சூலத்தால் உன் தலையை அறுத்துக் கழுகுகளுக்கும் நரிகளுக்கும் உன் தேஹத்தை இரையாய்க் கொடுக்க வேண்டியது. நீ என்னைக் கொன்றால் என் கர்மபந்தம் நீங்கும். என் தேஹத்தை ப்ராணிகளுக்கு ஆஹாரமாகியாய்க் கொடுப்பேன். இதோ நிற்கிறேன். ஏன் வஜ்ரத்தால் என்னை அடிக்காமலிருக்கிறாய்? விஷ்ணுவாலும் ததீசியாலும் அனுக்ரஹிக்கப்பட்டிருக்கிறாய். விஷ்ணுவை ஆச்ரயிக்கிறவர்களுக்கு ஸகல உத்தமகுணங்களும் ஜயமும் பொருந்தியிருக்கின்றன. இந்தத் தேஹத்தைப் பலிகொடுத்து மஹாயோகிகள் அடையும் உத்தமகதியையடைவேன். ஸர்வேச்வர! உனது அடியார்களுக்கு எப்பொழுதும் தொண்டுசெய்யும் வரத்தையே எனக்களிக்கவேண்டும். பரமதபமும் அணிமாதிஸித்திகளும் முக்தியும் இதற்குக் கோடிமடங்கு கீழானவை"யென்று சூலத்தைச் சுழற்றி இந்த்ரனை அடித்தான். தேவராஜன் வஜ்ரத்தால் அந்தச் சூலத்தையும் அதைப் பிடித்திருந்த கையையும் வெட்டினான். விருத்ரன் இடதுகையால் ஒரு கதையைச் சுழற்றி இந்த்ரனையும் ஐராவதத்தையும் அடித்தான். வஜ்ரம் இந்த்ரனுடைய கையிலிருந்து நழுவி விழுந்தது. அதை எடுப்பதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு இந்த்ரன் தயங்கி நிற்க, விருத்ரன் புன்சிரிப்புடன், "தேவராஜ! வெட்கப்படாதே, வஜ்ராயுதத்தை எடுத்து உன் சத்ருவைக் கொல். வெட்கப்படுவதற்கும் துக்கிப்பதற்கும் இதுதானா இடம்? நீயும் நானும் கர்த்தாக்களல்ல. பகவானல்லவா நம்மெல்லோரையும் நடத்துகிறவர். ஸகல ப்ரபஞ்சத்தை

யும் அவரே வ்யாபித்து நடத்துகிறார். என்னைப் பார். நான் ஜயிக்
கப்பட்டேன். சூலமும் கையும் அற்றன. அப்படியும் உன்னைக்
கொல்வதற்கு என்னுலியன்ற யத்னஞ்செய்துகொண்டிருக்கிறேன்.
இந்த யுத்தம் சூதாட்டத்தைப்போன்றது. நமது ப்ராணனே பந்
தயமெ"ன்றான்

விருத்ராஸுரனுடைய ஞானத்தையும் பெருந்தன்மையை
யும் பார்த்து இந்த்ரன் ப்ரமித்துத், "தானவேச்வர! விஷ்ணுவின்
மாயையை ஜயித்தவன் நீயே. அஸுரஸ்வபாவம் முற்றிலுமற்
றுப் பகவானிடத்தில் கலங்காத பக்தியைப் பெற்றாய். நீயே
மஹாத்மாவெ"ன்றான். பிறகு இருவரும் கோரயுத்தம் செய்தார்
கள். இந்த்ரன் வஜ்ரத்தால் விருத்ரனுடைய மற்றொரு கையையும்
கதையையும் நாசஞ்செய்ய, விருத்ரன் வாயைத் திறந்து இந்த்ரனை
விழுங்கினான். தேவர்கள் பயந்து அலறினார்கள். ஆனால் இந்த்
ரன் வஜ்ரத்தால் விருத்ரனுடைய தேஹத்தைப்பிளந்து வெளியில்
வந்து, விருத்ராஸுரனுடைய சிரஸை வஜ்ராயுதத்தால் அறுத்
தான். தன் பூர்ணபலத்தை ப்ரயோகித்தும் 360-நாள்கள் சென்
றன. பிறகு அந்த அஸுரச்ரேஷ்டனுடைய தேஹத்திலிருந்து
ஆத்மஜ்யோதிஸ் கிளம்பி ஸங்கர்ஷணபகவானுடைய ஸ்வரூபத்
தில் கலந்ததை எல்லோரும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள்.

மறுபடியும் ப்ரஹ்மஹத்யாதோஷம் இந்த்ரனைச் சுற்றிக்கொ
ண்டு பயங்கரமான சண்டாளஜாதி கிழவியைப்போல் அவனைத்
துரத்திற்று. தேவராஜன் மானஸஸரஸில் மூழ்கி ஓர் தாமரைத்
தண்டில் ஒளிந்துகொண்டான். அங்கே ஆயிரம்வர்ஷங்கள் வரை
யில் வஸித்துப் பிறகு அந்தத்தோஷம் நீங்கி, ஸ்வர்க்கராஜ்யத்தை
யடைந்தான். இந்த யுத்தம் வைவஸ்வதமன்வந்தரத்தில் முதலா
வது சதுர்யுகத்தில் த்ரேதாயுக ஆரம்பத்தில் நர்மதாநதிக்கரை
யில் நடந்தது. (பாகவதம். VI. 9-13).

ஒருக்கால் இந்த்ரன் ஸுதர்மாவென்ற தேவஸபையில் முப்
பத்திமுக்கோடி தேவர்களாலும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளா
லும் யக்ஷ கின்னர ஸித்த கந்தர்வ வித்யாதர பன்னக உரக கருட
ஸாத்ய அப்ஸரஸ்கணங்களாலும் சூழப்பட்டுக் கொலுவீற்றிருக்
கையில் தேவகுருவான ப்ருஹஸ்பதி அங்கே வந்தார். இந்த்ரன்
அதிகாரக்கொழுப்பால் அவரை பூஜித்து மர்யாதைசெய்யவில்லை.
அந்த அவமானத்தைப் பொறுக்காமல் குரு தேவர்களை விட்டுப்

போனார். அந்த ஸமயம்பார்த்து அஸுரர்கள் அவர்களுடன் சண்டையிட்டு த்ரிலோகியைப் பலாத்காரமாய் அபஹரிக்க யத்னித்து, சுக்ராசார்யருடைய ஸஹாயத்தால் தேவர்களையுத்தத்தில் ஜயித்து ஸ்வர்க்கத்திலிருந்து துரத்திவிட்டார்கள். அவர்கள் ப்ரஹ்மாவிடத்திற்போய் முறையிட, சதுர்முகர், "தேவர்களே! த்வஷ்டாவின் புத்ரனான விச்வரூபனை நீங்கள் குருவாக வைத்துக்கொள்ளுங்களே"ன்றார். அவர்கள் அப்படியே விச்வரூபனை ப்ரார்த்திக்க அவன் அவர்களுக்கு ஆசார்யனாயிருக்க ஸம்மதித்தான். பிறகு இந்த்ரனுக்கு நாராயணகவசத்தை உபதேசிக்க, அதின் மஹிமையால் தேவராஜன் அஸுரர்களை ஸுலபமாய் ஜயித்து த்ரிலோகராஜ்யத்தை ஸ்வாதீனஞ்செய்துகொண்டான்.

விச்வரூபனுக்கு மூன்று தலைகள். ஒன்றால் ஸோமரஸத்தையும் ஒன்றால் மதுவையும் ஒன்றால் அன்னத்தையும் புஜிப்பான். யக்ஞபாகங்களை ப்ரத்யக்ஷமாய்த் தேவர்களுக்கும், ரஹஸ்யமாய் அவைகளின் ஸாரத்தை அஸுரர்களுக்கும் கொடுத்து வந்தான். அஸுரர்கள் அவனுக்குத் தாயின் வழியாய்ப் பந்துக்கள். இப்படி வெகுகாலம் நடந்துவந்தது. தேவர்கள் வரவர வீர்யம் குறைந்து மெலிந்து அஸுரர்களுக்குப் பின்வாங்கினார்கள். அதைக்கண்டு இந்த்ரன், "இதென்ன விபரீதம்? நீங்கள் இப்படி வரவர பலமற்று வீர்யங்குறைந்துபோகவேண்டியதென்ன? யக்ஞபாகங்களைக் குறைவில்லாமல் பெற்றுக்கொள்ளவில்லையா? உங்களுக்கென்ன கஷ்டம். தெரிவியுங்களே"ன்றான். அவர்கள், "ஸ்வாமி! யக்ஞபாகங்கள் எப்பொழுதும்போல் பூர்ணமாய்க் கிடைக்கின்றன. ஆனால் அவைகளைப் புஜிப்பதால் எங்களுக்குத் திருப்தியில்லை; பலமும் வீர்யமும் விருத்தியாகவில்லை; வரவரக் குறைகின்றன. நாங்கள் எவ்வளவு யோசித்தும் இதற்குக் காரணம் தெரியவில்லை"யென்றார்கள். இந்த்ரன், "எவ்வளவு காலமாய் இப்படி நடந்துவருகிறது" என்றான். தேவர்கள், "மஹாராஜ! முன்பு பிருஹஸ்பதிபகவானிருக்கையில் இப்படியறியோம்"என்றார்கள். இந்த்ரன் நன்றாய் யோசித்துப்பார்த்து, "ஓஹோ! இப்படியா? விச்வரூபனை ஜாக்ரதையாய்க் கவனிக்கவேண்டுமே"ன்று அன்றுமுதல் அவன் யக்ஞஞ்செய்யும்பொழுதெல்லாம் கவனித்துவந்தான். அதிசீக்ரத்தில் அவனுடைய தந்த்ரத்தையும் த்ரோஹத்தையும் கண்டுபிடித்தான். "இப்படியிருந்தால் நாம் ராஜ்யபாலனஞ்செய்வதெப்

படி? குடிமுழுகிப்போய்விடுமெ"ன்று கோபத்தால் மெய்மறந்து, வஜ்ரத்தைச் சுழற்றி விச்வரூபனுடைய தலைகளையறுத்துத்தள்ளினான். உடனே அவை சாதகம் சடகம் தித்திரி என்ற பக்ஷிகளாய் மாறின. ப்ராஹ்மஹத்யாதோஷம் இந்த்ரனைச் சுற்றிக்கொண்டது. அதை ஸஹிக்கமுடியாமல் ப்ருஹஸ்பதியைச் சரணமடைந்து ப்ரார்த்திக்க, அவர் கிருபைபுரிந்து, "தேவேந்த்ர! இந்த ப்ரஹ்மஹத்யாதோஷத்தைப் பிறருக்குப் பங்கிட்டுக்கொடுத்துவிடு. அவர்கள் கேட்ட வரங்களை அளித்து எப்படியாவது ஒப்புக்கொள்ளும்படி செய்"யென்றார்.

அப்படியே இந்த்ரன், 'இந்தத் தோஷத்தை வாங்கிக்கொள்ளுகிறவர்களுண்டோ'வென்று ஸகல லோகங்களிலும் அலைந்து திரிகையில், பூமிதேவியைப்பார்த்து, "நீ இந்த ப்ரஹ்மஹத்யையை வாங்கிக்கொள். உனக்கு வேண்டியதைக்கேளெ"னப் பூமி, "என்னால் நாலிலொருபங்கைத் தாங்கமுடியும். இதுவரையில் என் தேஹத்தில் உண்டாகும் பள்ளங்களெல்லாம் அப்படியே கிடக்கின்றன. என்னை எவ்வளவு தடவை எவ்வளவு ஆழம் வெட்டினாலும் அதிசீக்ரத்தில் அந்தப் பள்ளங்கள் நிரப்பவேண்டுமென்று கிருபைசெய்யுங்க"ளென்றாள். இந்த்ரன் 'அப்படியே ஆகக்கடவதெ'ன்று தன் பாபத்தில் நாலிலொரு பங்கைப் பூமிதேவிக்குக் கொடுத்தான். அது அன்றுமுதல் உவர்நிலங்களில் வெடிப்புகளாகக் காணப்படுகின்றது.

பிறகு ஜலத்தைப்பார்த்து, "நீயும் இந்தப் பாபத்தை வாங்கிக்கொள்ளமாட்டாயோ?"வென, ஜலதேவதை, "என்னால் அவ்வளவு முடியுமா? எதோ பூமியைப்போல் நானும் பெற்றுக்கொள்ளுகிறேன். மற்ற எந்தப் பதார்த்தத்தோடும் நான் சேரும்படியாயும் என்னால் அவை சுத்தியாகும்படியாயும் எனக்கு வரங்கொடுக்கவேண்டு"மென்று ப்ரார்த்தித்தது. 'அப்படியே ஆகட்டு'மென்று இந்த்ரன் அனுக்ரஹித்து ப்ராஹ்மஹத்யையில் நாலிலொருபங்கை ஜலத்திற்குக் கொடுத்தான். அது அன்றுமுதல் ஜலத்தில் குமிழியாயும் நுரையாயும் காணப்படுகிறது.

பிறகு மரங்களைப்பார்த்து, "இன்னும் பாதி இருக்கிறது; அதை நீங்கள் பெற்றுக்கொள்ளலாகாதோ?"வென்று இந்த்ரன் ப்ரார்த்திக்க விருக்ஷதேவதைகள், "நாங்கள் பூமியையும் ஜலத்தையும் காட்டிலும் மேலானவர்களா? அவர்களைப்போல் நாங்களும்

ஒரு பாகத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இதுவரையில் எங்களுடைய தேஹத்தில் வெட்டப்பட்டால் மறுபடியும் வளர்கிறதில்லை. அந்தக் குறை நீங்கவேண்டு''மென்று ப்ரார்த்தித்தார்கள். 'அப்படியேயாகட்டு'மென்று தேவராஜன் ப்ரஹ்மஹத்யையில் நாலிலொருபங்கை அவைகளுக்குக் கொடுத்தான். பிறகு ஸ்த்ரீகளிடத்திற்குச் சென்று, "இன்னும் ஒருபாகம் பாக்கியிருக்கின்றது. அதைப் பெற்றுக்கொண்டு உங்களுக்குவேண்டிய வரங்களைக்கேளுங்களே''ன, அவர்கள் "அப்படியே செய்கிறோம்; ஆனால் எங்களுக்கு ப்ரஸவகாலம்வரையில் நாங்கள் புருஷர்களுடன் அநுபவிக்கும்படி வரந்தரவேண்டுமெ''ன, இந்த்ரனும் அதற்கு ஸம்மதித்து ப்ரஹ்மஹத்யையில் நாலிலொருபங்கை ஸ்த்ரீகளுக்குக் கொடுத்து அதிலிருந்து விடுபட்டான். ப்ருஹஸ்பதியை நமஸ்கரித்து மறுபடியும் ராஜ்யத்திற்கு அழைத்துவந்து முன்போல் ஸுகமாய் ஆண்டுவந்தான். அது அன்றுமுதல் ஸ்த்ரீகளிடத்தில் மாதவிடாய்ரூபமாய்க் காணப்படுகிறது. ஆகையால் அந்த நான்கு தினங்களிலும் அவர்கள் புருஷர்களுடைய கண்ணில்படாமல் மறைவாயிருக்கவேண்டியது. வீட்டிலிருக்கக்கூடாது. ஒரேதடவை புஜிக்கவேண்டியது. தலைமயிரைவாரி அலங்கரித்துக்கொள்ளுதல், எண்ணெயிட்டுக்கொள்ளுதல், வாஸனைத்ரவ்யங்கள் தாம்பூலம் ஸ்நாநம் முதலியவை கூடாது. உயரமான பாத்ரங்களிலாவது கைகளிலாவது ஜலத்தை வாங்கிக்குடிக்கவேண்டியது. (பாகவதம். VI 7. 8. வா. ரா. கிஷ்கிந்தாகாண்டம் 24; உத்தரகாண்டம் 84, 85, 86; பத்மபுராணம், ஸ்ருஷ்டிகாண்டம் 19, 71; ப்ரஹ்மபுராணம் 96; பாத்மம், பூமிகண்டம் 23, 24-ஐப் பார்க்க).

இந்த்ரனைக் கொல்வதற்காகவே த்வஷ்டா விச்வரூபனை ஸ்ருஷ்டித்தான். அந்தப் புத்ரன் இந்த்ரபதவியை அபேக்ஷித்தான். ஒரு முகத்தால் வேதாத்யயனஞ்செய்தான். மற்றொரு முகத்தால் ஸுராபானஞ்செய்தான். மற்றொரு முகத்தால் ஸகல திக்குகளையும் விழுங்கிவிடுகிறவனைப்போல் பார்ப்பான். இந்த்ரன் அவனுடைய கடுந்தபஸால் பயந்து அப்ஸரஸ்களை அனுப்பி அதைக் கெடுக்கப்பார்த்தான். அவனைக் கொஞ்சமாவது கலக்கமுடியவில்லை. பிறகு வஜ்ராயுதத்தை ப்ரயோகித்து அவனுடைய தலைகளை அறுத்தான். அப்படியும் அவனுடைய காந்தி குறைய

வில்லை; உயிருடனிருப்பதுபோல் தோன்றினான். அவனுடைய தலைகள் தித்திரி கலவிங்கம் கபிஞ்ஜலமென்ற பக்ஷிகளின் ரூபமெடுத்தன. பிறகு அந்தக் காட்டிற்கு ஓர்மரம் வெட்டுகிறவன் கோடாலியைத் தோளில் மாட்டிக்கொண்டு வந்தான். அவனைக்கண்டு இந்த்ரன், "நீ அதிவேகமாய்ச் சென்று அதோ பூமியில் கிடக்கிறவனுடைய தலைகளை வெட்டிவாவெ"ன்றான். அதற்கு அந்த மரம்வெட்டுகிறவன், "இவனுடைய தோள்கள் பெரிதாயும் வலுவாயுமிருக்கின்றன. என் கோடாலியால் இவனுடைய தலைகளை வெட்டமுடியாது. ஸாதுக்கள் நிந்திக்கும்படியான கார்யத்தை நான் செய்யமாட்டேனெ"ன்றான். இந்த்ரன், "பயப்படாதே! என் அனுக்ரஹத்தால் உன் ஆயுதம் வஜ்ரத்தைப்போல் உறுதியாயிருக்குமெ"ன்றான். அதற்கு அந்தத் தச்சன், "நீ யார்? இந்த க்ரூர கார்யத்தை ஏன் செய்தாய்? நிஜத்தைச் சொல்லெ"ன்றான். இந்த்ரன், "நான் தேவர்களுக்கரசனான இந்த்ரன். நான் சொல்லுகிறபடி செய். ஆலோசிக்காதேயெ"ன்றான். அந்தத் தச்சன், "இந்த்ர! இந்த க்ரூரகார்யத்தைச் செய்தோமேயென்ற வெட்கம் உனக்கு ஏன் கொஞ்சங்கூட இல்லை? இந்த ரிஷிபுத்ரனைக் கொன்றாயே. உனக்கு ப்ரஹ்மஹத்யாதோஷம் வராதாவெ"ன்றான். இந்த்ரன், "நான் அதைப் போக்கக் கடுமையான ப்ராயசித்தம் செய்வேன். இவன் என் சத்ரு; மஹாபலவான். ஆகையால் அவனை என் வஜ்ரத்தால் கொன்றேன். இந்த க்ஷணம்வரையில் அவனிடத்தில் எனக்கு மிகுந்த பயமுண்டு. யாகங்களில் கொல்லப்படும் பசுக்களின் தலைகளை நீ இன்றுமுதல் பெற்றுக்கொள்ளக்கடவாய். இனி தாமஸஞ் செய்யாதேயெ"ன்றான். உடனே அந்தத் தச்சன் தன் கோடாலியால் விச்வரூபனுடைய மூன்றுதலைகளையும் வெட்டினான். அப்பொழுது வேதாத்யயனஞ்செய்து ஸோமத்தைக்குடிக்கும் முகத்திலிருந்து கபிஞ்ஜலமென்ற பக்ஷிகள் (புறாக்கள்) உண்டாயின. திக்குகளைப்பார்க்கும் முகத்திலிருந்து தித்திரிபக்ஷிகள் (தூக்கணாங் குருவிகள்) உண்டாயின. ஸுராபானம் செய்யும் முகத்திலிருந்து கலவிங்கபக்ஷிகள் (கிளிகள்) உண்டாயின.

இந்த்ரனுக்கும் விருத்ராஸுரனுக்கும் நடந்த யுத்தத்தில் விருத்ரன் தன் சத்ருவை விழுங்கிவிட்டான். அதைக்கண்டு தேவதைகள் கொட்டாவியை உண்டுபண்ண, விருத்ரன் வாயைத் திறக்கும்பொழுது இந்த்ரன் தன் அவயவங்களைச் சுருக்கிக்கொண்டு வெளியில் வந்தான். அன்றுமுதல் கொட்டாவி மனுஷ்யர்களை ஆச்ரயித்தது.

பிறகு இந்த்ரன் விருத்ரனால் துரத்தியடிக்கப்பட்டு, த்வஷ்டாவின் தேஜஸால் சோர்ந்து மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்தான். அவர் தேவர்களைப்பார்த்து, "நீங்கள் விருத்ரனுக்கும் இந்த்ரனுக்கும் ஸமாதானம் செய்வியுங்கள். நான் வஜ்ரத்தில் ப்ரவேசித்து அந்த அஸுரனைக் கொல்லுகிறேனெ"ன்றார். ரிஷிகளும் தேவர்களும் அப்படியே செய்ய, விருத்ரன், "எங்களிருவர்க்கும் ஸமாதானம் எப்படி ஏற்படும்? நாங்கள் ஸமானபலமுள்ளவர்கள். ஆகையால் எனக்கு உலர்ந்த வஸ்துவாலும் நனைந்த வஸ்துவாலும் கல்லாலும் கட்டையாலும் ஆயுதத்தாலும் அஸ்த்ரசஸ்த்ரங்களாலும் பகலிலும் இரவிலும் மரணம் நேரக்கூடாது. இந்த்ரனும் தேவர்களும் ஒன்று சேர்ந்தாலும் எனக்குக் கெடுதிசெய்யக்கூடாது. எனக்கு இந்த வரத்தை நீங்கள் கொடுத்தால் இந்த்ரனுடன் ஸமாதானஞ்செய்வேனெ"ன்றான். அவர்களும் அதற்கு ஸம்மதிக்க, இந்த்ரனுக்கும் விருத்ராஸுரனுக்கும் ஸமாதானம் ஏற்பட்டது. ஆனால் இந்த்ரன்மாத்ரம் அந்த அஸுரனைக் கொல்வதற்கு ஒவ்வொரு நிமிஷமும் ஸமயம்பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் விருத்ரன் கடற்கரையிலிருந்தான். அப்பொழுது ஸாயங்காலம். இந்த்ரன் அதைக்கண்டு, 'இது பகலல்ல, ராத்ரியுமல்ல. இந்த அஸுரனை எப்படியாவது உபாயத்தால் இப்பொழுது கொன்றொழிய எனக்கு வேறு ஸமயம் கிடைக்காதெ'ன்று விஷ்ணுவை ப்ரார்த்திக்க, உடனே ஸமுத்ரத்திலிருந்து மலைபோன்ற நுரை மிதந்துவந்தது. அதைக்கண்டு இந்த்ரன், "இது நனைந்த வஸ்துவுமில்லை, உலர்ந்த வஸ்துவுமில்லை, ஆயுதமுமில்லை, கல்லுமில்லை, கட்டையுமில்லை. ஆகையால் இதைவிருத்ரன்மேல் எறிந்து அவனைக்கொல்லவேண்டுமெ'ன்று ஆலோசித்தான். அப்பொழுது காலரூபியான பகவான் அந்த நுரையில் ப்ரவேசித்தார். இந்த்ரன் அதை எடுத்து விருத்ரன் மேல் எறிய அவன் உயிரைவிழந்தான். உடனே ஸகல லோகங்களும் க்ஷேமமடைந்தன. ஆனால் இந்த்ரன் பொய்சொன்னதாலும் ப்ரஹ்மஹத்யாதோஷத்தாலும் பீடிக்கப்பட்டுப் புத்திமயங்கி ப்ரக்ஞையற்று அடையாளங்கண்டுபிடிக்கமுடியாமல் லோகங்களுக்கு வெளியிலிருந்தான். அப்பொழுது பூமியில் மழைபெய்யவில்லை; விருக்ஷங்கள் வளரவில்லை; ஸகல ப்ராணிகளும் மனங்கலங்கி வாடின; மஹர்ஷிகள் பயந்தார்கள்; தேவர்கள் ஸகல ஜகத்தும் அரசனில்லாமல் தவிப்பதைக்கண்டு கவலைகொண்டார்கள். அப்பொழுது தேவர்களும் ரிஷிகளும் சேர்ந்து நகுஷனை இந்த்ரனாகச்செய்

தார்கள். அவன் கர்வத்தால் ஸ்வர்க்கத்திலிருந்து பூமியில் விழுந்தவுடன் தேவர்கள் இந்த்ரனிருக்குமிடத்தைத் தேடி, ஒரு தாமரைத் தண்டில் ஒளிந்துகொண்டிருப்பதைக் கண்டு, மறுபடியும் அழைத்துவந்து தேவராஜனாய் அபிஷேகஞ்செய்தார்கள். ப்ருஹஸ்பதியால் ஸ்தோத்ரஞ்செய்யப்பட்டு வரவர இந்த்ரனுடைய பலமும் தேஜஸும் விருத்தியடைந்தன—பாரதம் உத்தியோகபர்வம்—199.

முன்பு நமுசியென்ற அஸுரன் இந்த்ரனிடத்தில் பயந்து, ஸூர்யனுடைய கிரணத்தில் ஒளிந்துகொண்டான். இந்த்ரன் நமுசியுடன் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு, "அஸுரசிரேஷ்ட! உன்னை நான் இரவிலும் பகலிலும் நனைந்த பதார்த்தத்தாலும் உலர்ந்த பதார்த்தத்தாலும் கொல்வதில்லையெ"ன்று ப்ரமாணஞ்செய்துகொடுத்தான். ஒருநாள் மூடுபனியைக் கண்டு, தேவேந்த்ரன் ஓர் யுக்தியை ஆலோசித்து, ஜலத்தின் நுரையால் நமுசியைக் கொன்றான். அவனுடைய தலை, "அடே! மித்ரத்ரோஹி! மஹாபாபி!" யென்று சொல்லிக்கொண்டே அவனைத் துரத்த ஆரம்பித்தது. இந்த்ரன் அந்த உபத்ரவத்தைப் பொறுக்கமுடியாமல் ப்ரஹ்மாவைச் சரணமடைய, அவர் "அருணாதீர்த்தத்தில் யாகஞ்செய்தால் இந்தத் தோஷம் நீங்குமெ"ன்றார். அங்கே ஸரஸ்வதியும் அருணையும் சேருமிடத்தில் ஸ்நானஞ்செய்து, தானங்களைக்கொடுத்து யாகத்தை நடத்தினான். நமுசியின் சிரஸும் அந்தத் தீர்த்தத்தில் விழுந்து அவனுக்கு உத்தமகதியைக் கொடுத்தது.—பாரதம். சல்யபர்வம் 44.

விருத்ரனுடைய மாயையால் இந்த்ரன் தைர்யமிழந்து இருப்பதைக்கண்டு, ப்ருஹஸ்பதி வஸிஷ்டர் முதலியவர்கள் லோகங்களுடைய ஹிதத்தின்பொருட்டுப் பரமசிவனிடத்திற்சென்று, "ஸ்வாமி! இந்த்ரனால் விருத்ரனைக் கொல்லமுடியவில்லை. தாங்களே தயவுசெய்து அவனைக் கொல்லவேண்டு"மென, சங்கரனுடைய சக்தி ஓர் ஜ்வரரூபமாய் விருத்ரனுடைய சரீரத்தில் ப்ரவேசித்தது. மஹாவிஷ்ணு இந்த்ரனுடைய வஜ்ராயுதத்தில் ப்ரவேசித்தார். மஹாதேவன் தன் சக்தியை இந்த்ரனுக்கு அனுக்ரஹித்தார். உடனே அஸுரர்களுக்கு ஞாபகசக்தி மறைந்தது; மாயாவித்யைகளை மறந்தார்கள். விருத்ரனுடைய வாயிலிருந்து நெருப்புஜ்வாலைகள் வெளிப்பட்டன; மிகவும் வெளுத்து நடுங்கினான்; மூச்சுத் திணறிற்று; தலைமயிர்கள் சிலிர்த்தன. அவனுடைய ஞாபகசக்தி கோரரூபமுள்ள ஓர் நரியைப்போல் அவனுடைய வாயிலிருந்து வெளி

பிற்று. அவனைச் சுற்றிலும் பயங்கரமான எரிகொள்ளிகள் விழுந்தன. கழுகுகளும் பருந்துகளும் நாரைகளும் அவனுக்குமேல் வட்டமிட்டன. மஹேச்வரனுடைய ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டு விருத்ரன் கொட்டாவிவிட, அப்பொழுது இந்த்ரன் அவனை வஜ்ராயுதத்தால் அடித்துக்கொன்றான். உடனே அந்த ப்ராஹ்மஹத்யாதோஷம் விருத்ரனுடைய தேஹத்திலிருந்து வெளிக்கிளம்பிற்று. கந்தைகளையும் மரவுரியையும் தரித்துக்கொண்டு, உடம்பெங்கும் ரக்தம் பெருகப், பயங்கரமான பல்லுகளுடனும் நேத்ரங்களுடனும், கபாலங்களை மாலையாயணிந்துகொண்டு விகாரமான அவயவங்களுடன் இந்த்ரனைப் பிடித்துக்கொண்டது. தேவர்கள் ப்ரஹ்மாவிடத்தில் முறையிட, அவர் அந்த ப்ரஹ்மஹத்யையை அழைத்து, "இந்த்ரனை விட்டுவிடு. உனக்கு வேண்டியதைச் செய்கிறேன். சொல்"லென்றார். அது, "ஸகல லோகாதிபதியான தாங்களே என்னை இப்படிக் கேட்கும்பொழுது, எனது கோறிக்கைகள் நிறைவேறின. ப்ராஹ்மணனைக் கொன்றவனை நான் தொடரவேண்டுமென்று தாங்களே விதியை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். நான் இந்த்ரனை விட்டுவிடுகிறேன். எனக்கு வேறு இருப்பிடத்தைக் காட்டுங்க"ளென்றது. அதற்குப் பிதாமஹர் அக்னிபகவானை வருவித்து, "இந்த ப்ரஹ்மஹத்யையில் நாலிலொருபங்கை ஒப்புக்கொள்"ளென்றார். அதற்கு அக்னி, "அப்படியே செய்கிறேன்; இதிலிருந்து தப்பிக்கும் வழியென்ன"வென்றார். சதுர்முகர் "நீ ஜ்வலித்துக்கொண்டிருக்கும்பொழுது உன் ரூபத்தைப் பார்த்தவன் தமோகுணத்தால் புத்திமயங்கி உனக்கு ஆஹுதிசெய்யாவிட்டால், உன்னிடத்திலிருக்கும் ப்ரஹ்மஹத்யை அவனைச் சேரக்கடவ"தென்றார். அக்னி அப்படியே ஒரு பாகத்தை ஒப்புக்கொண்டார். பிறகு ப்ரஹ்மா விருக்ஷங்களையும் கொடிசெடிகளையும் அழைத்து, "நாலிலொருபங்கை நீங்களும் ஒப்புக்கொள்ளுங்க"ளென, அவைகள், "ஸ்வாமி! நாங்கள் இதுவரையில் படும் கஷ்டம் போதாதா, வெயிலாலும் குளிராலும் மழையாலும் காற்றாலும் கஷ்டப்பட்டு? எவனும் நினைத்தபடி எங்களை வெட்டவும் அறுக்கவும் கிள்ளவும் குத்தவும் ஜன்மமெடுத்தோம். ஆனாலும் தங்களுத்திரவுப்படி செய்கிறோம். அதைப்போக்கும் வழியென்ன"வென்றன. ப்ரஹ்மா, "அமாவாஸ்யை பௌர்ணிமாவாஸ்யைகளில் உங்களை ஒருவன் வெட்டினாலும் அறுத்தாலும் கிழித்தாலும் அந்தத் தோஷம் அவனைச் சேரட்டு"மென்றார். அவை அப்படியே ஒப்புக்கொண்டன. பிறகு

ப்ரஹ்மா அப்ஸரஸ்களை வருவித்து, "இந்த்ரனுடைய ப்ரஹ்மஹத்யையில் நாலிலொருபங்கை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டு"மென, அவர்கள், "ஸ்வாமி! அப்படியே செய்கிறோம். ஆனால் அது நீங்கும் வழியென்ன"வென, ஸ்வயம்பு "ஸ்த்ரீகளுடன் மாஸவிடாய்க்காலத்தில் சேருகிறவனை உங்களிடத்திலுள்ள ப்ரஹ்மஹத்யை சேரட்டுமெ"ன்றார். அவர்கள் அப்படியே ஒப்புக்கொண்டார்கள். பிறகு ப்ரஹ்மா ஜலங்களை வருவித்து "இந்த்ரனுடைய ப்ரஹ்மஹத்யாதோஷத்தில் நாலிலொருபங்கை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்க"ளென, அவை, "ப்ரபோ! அப்படியே செய்கிறோம். ஆனால் அது விலகும் வழியென்ன"வென, ப்ரஹ்மா "புத்தி மயங்கி உங்களை அலக்ஷ்யஞ்செய்து மலஜலங்களையும் கோழையையும் மற்று அசுத்தமான பதார்த்தங்களையும் உங்களிடத்தில் போடுகிறவனை அந்தத் தோஷம் தொடரட்டுமெ"ன்றார். பிறகு இந்த்ரனை அச்வமேதயாகம் பண்ணச்செய்து ப்ரஹ்மஹத்யாதோஷத்திலிருந்து விடுவித்தார்—பாரதம் சாந்திபர்வம் 288.

ஹிரண்யகசிபு அஸுரர்களை அழைத்துக்கொண்டு, தங்களுக்கு ஸஹோதரியான விச்வரூபனுடைய மாதாவிடத்திற்குச்சென்று, "அம்மா! உன் புத்ரன் தேவர்களுக்குப் புரோஹிதராயிருந்து யக்ஞ பாகங்களை அவர்களுக்கு ப்ரத்யக்ஷமாயும் எங்களுக்கு மறைவாயும் கொடுக்கிறார். ஆகையால் தேவர்களுக்குப் பலம் விருத்தியாகிறது; எங்களுக்கு வரவரக்குறைகிறது. ஆகையால் அவரைத் தடுத்து எங்களைச் சேரும்படிசெய்"யென்று ப்ரார்த்தித்தார்கள். அவள் நந்தனவனத்திற்குச்சென்று, விச்வரூபனைக்கண்டு, "குழந்தாய்! நீ சத்ருபக்ஷத்தை விருத்திசெய்துகொண்டு உன் மாமனைச் சேர்ந்தவர்களை நாசஞ்செய்கிறாய். இது யுக்தமல்ல"வென்றாள். விச்வரூபன் தாயின் சொல்லைத்தவறாதவனானதால் அஸுரர்களுடைய பக்ஷத்தில் சேர்ந்தான். ஹிரண்யகசிபு அதுவரையில் தனக்குப் புரோஹிதராயிருந்த வஸிஷ்டரை விலக்கி,விச்வருபனை அந்த ஸ்தானத்தில் நியமித்தான். அப்பொழுது வஸிஷ்டர், "அடே! அஸுர! என்னைக் காரணமில்லாமல் விலக்கி,விச்வரூபனைப் புரோஹிதனாய் நீ வைத்தபடியால், இந்த யாகம் முடியாமல் ஒரு அபூர்வமான ஜந்துவால் நீ மரணமடைவாயெ"ன்று சபித்தார். அப்படியே மஹாவிஷ்ணு நாரஸிம்ஹரூபமெடுத்து அவனைக் கொன்றார். விச்வரூபன் தன் தாயைச் சேர்ந்தவர்கள் விருத்தியாகவேண்டுமெ

ன்று கடுந்தபஸ் செய்தான். இந்த்ரன் அதைக் கெடுப்பதற்கு அனேக அப்ஸரஸ்களையனுப்பினான். விச்வரூபன் அவர்களுக்கு வசப்பட்டான்; அதையறிந்து அவர்கள், "நாங்கள் இந்த்ரனைச் சேர்ந்தவர்கள்; இனி இங்கிருக்கக்கூடாது; தேவலோகம் போகவேண்டுமெ"ன, விச்வரூபன், "அப்படியா? இந்த்ரனையும் மற்ற தேவர்களையும் ஒரு நொடியில் நாசஞ்செய்கிறேனெ"ன்று, சில மஹாமந்த்ரங்களை ஜபித்தான். அவனுடைய வீர்யம் விருத்தியாயிற்று; ஒரு முகத்தால் ப்ராஹ்மணர்கள் யாகங்களில் கொடுக்கும் ஸோமபானத்தையும், இரண்டாவது முகத்தால் ஹவிஸையும், மூன்றுவது முகத்தால் தேவர்களின் சக்தியையும் க்ரஹித்தான். அவர்கள் ப்ரஹ்மாவிடத்திற்குப் போய், "ப்ரபோ! யாகயக்ஞங்களில் கொடுக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் எங்களுடைய தேஜஸையும் விச்வரூபன் அபஹரிக்கிறான். நாங்கள் பலமற்றோம்; அஸுரர்கள் பலவான்களாய் எங்களைத் துரத்தியடிக்கிறார்கள். எங்களுக்கு என்னகதி"யென்று முறையிட்டார்கள். ப்ரஹ்மா கொஞ்சம் ஆலோசித்துப், "ப்ருகுவம்சத்தில் பிறந்த ததீசிரிஷி தபஸ் செய்துகொண்டிருக்கிறார். அவருடைய தேஹத்தைக் கொடுக்கும்படி ப்ரார்த்தியுங்கள். அதின் எலும்புகளால் வஜ்ரமென்ற ஆயுதத்தைச் செய்யுங்களெ"ன்றார். தேவர்கள் ததீசியிடத்திற்குச் சென்று, "ஸ்வாமி! தபஸ் இடையூறில்லாமல் நடந்துவருகிறதா"வென, அவர் "க்ஷேமம். உங்களுக்கு என்னாலாகவேண்டியதென்ன? செய்யத் தயாராயிருக்கிறேனெ"ன்றார். "லோகங்களின் க்ஷேமத்திற்காகத் தங்களுடைய தேஹத்தைக் கொடுக்கவேண்டுமெ"ன்று தேவர்கள் வேண்ட, "ஆயிரம் வர்ஷங்கள் நான் இந்த்ரனாயிருக்கவேண்டுமெ"ன்று ததீசி கேட்டுக்கொண்டார். அப்படியே அவரை இந்த்ரனாக நியமித்துத் தேவராஜன் தபஸ்வியானான். அந்தக் காலம் முடிந்தவுடன் ததீசி யோகாப்யாஸத்தால் தன் தேஹத்தை விட்டார். ஸுகதுக்கங்களை ஸமமாய் எண்ணும் அந்த மஹான் அப்படிச் செய்வது ஸஹஜமே. அவருடைய எலும்புகளால்ப்ரஹ்மா வஜ்ரத்தைச் செய்தார்; அதில் விஷ்ணுவின் சக்தி ப்ரவேசித்தது. அதினால் இந்த்ரன் விச்வரூபனைக் கொன்றான். அவனுடைய பிதாவான த்வஷ்டா அவனுக்கு யாகபசுவின் சிரஸைக் கொடுத்தான். பிறகு அவனுடைய தேஹத்தைக்கடைந்து அதிலிருந்து விருத்ரனையுண்டாக்கினான். அவனும் தேவராஜனால் கொல்லப்பட்டான்:—பாரதம், சாந்திபர்வம், 352; வனபர்வம் 99, 100.

பூர்வகாலத்தில் விருத்ராஸுரன் பூமியில் ப்ரவேசித்து, அதின் ஸத்வத்தை இழுத்தான். அதினால் எல்லாப்புறங்களிலும் துர்க்கந்தம் கிளம்பிற்று. இந்த்ரன் கோபங்கொண்டு, அவனை வஜ்ரத்தால் அடித்தான். விருத்ரன் மிகவும் சாபமடைந்து ஜலத்தில் ப்ரவேசித்து, அதின் ஸத்வத்தையபஹரித்தான். அதற்கு ஸ்வபாவமான குணங்கள் விலகின. இந்த்ரன் கோபங்கொண்டு, அவனை மறுபடியும் வஜ்ரத்தால் அடித்தான். விருத்ரன் தேஜஸில் ப்ரவேசித்து அதின் ஸத்வத்தையபஹரித்தான். அதற்கு இயற்கையான ரூபமும் வர்ணமும் விலகின. இந்த்ரன் கோபங்கொண்டு, அவனை மறுபடியும் வஜ்ரத்தாலடிக்க, அவன் வாயுவில் ப்ரவேசித்து, அதின் ஸத்வத்தையபஹரித்தான். அதற்கு ஸ்வபாவமான ஸ்பர்சகுணம் விலகிற்று. இந்த்ரன் கோபங்கொண்டு, அவனை மறுபடியும் வஜ்ரத்தால் அடிக்க, அவன் ஆகாசத்தில் ப்ரவேசித்து, அதின் ஸத்வத்தை அபஹரித்தான். உடனே சப்தமென்ற குணம் அதைவிட்டு விலகிற்று. இந்த்ரன் கோபங்கொண்டு, அவனை மறுபடியும் வஜ்ரத்தால் அடிக்க, அவன் இந்த்ரனுடைய தேஹத்தில் ப்ரவேசித்து, அவனுடைய ஸ்வபாவகுணங்களை அபஹரித்தான். இந்த்ரனுடைய மனதில் மோஹம் குடிகொண்டது. அப்பொழுது வஸிஷ்டர் ஹிதோபதேசஞ்செய்தார். பிறகு தன் தேஹத்திலிருந்த விருத்ராஸுரனை ஸூக்ஷ்மமான வஜ்ரத்தால் இந்த்ரன் அடித்துக் கொன்றான்.—பாரதம் அச்வமேதபர்வம் 12.

92 2. தாடகை:—தாடகை பூர்வஜன்மத்தில் அப்ஸரஸாயிருந்து, ஒருநாள் காட்டில் ஓர் ரிஷியை ராக்ஷஸரூபத்தைத் தரித்துப் பயமுறுத்த, அவர், "நீ ராக்ஷஸியாகக்கடவாய்; ஸ்ரீராமனுடைய பாணத்தால் உனக்கு சாபவிமோசனமே"ன்று சபித்தார். அப்படியே அவள் திவ்யதேஹத்தையடைந்து ஸ்வர்க்கலோகஞ் சென்றாள். [ஆ. ரா. IV 8-10].

21. சாபத்தால்.—ஸுந்தன் அகஸ்த்யருடைய ஆச்ரமத்தை அழித்தான். அதற்காக அந்த ரிஷி அவனைச் சாம்பலாக்கினார். பிறகு தாடகையும் அவளுடைய புத்ரர்களுமான மாரீசனும் ஸுபாஹுவும் பாதாளத்திற்குச் சென்று ஸுமாலியுடன் வஸித்தார்கள். ராவணன் பூலோகத்திற்கு வந்தபிறகு அவனிடத்தில் சேர்ந்து உறவுகொண்டாடினார்கள்.—கம்பராமாயணம்.

93-8. மந்தரா:—மூன்று லோகங்களையும் நாசஞ்செய்ய பத்னித்த குமதியென்பவளை இந்த்ரன் கொன்றான்—தம்பாராமாயணம்.

10. பத்னியான:—18-வது ஸர்க்கத்தில் விஷ்ணுவின் அவதாரத்திற்குக் காரணமான ப்ருகுமஹர்ஷியின் சாபத்தைப்பற்றின கோட்டைப்பார்க்க. இது மத்ஸ்யபுராணத்திலும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

95. 19. பகவானுடைய ஆயுதத்தால் கொல்லப்பட்டுச் சாபந்தீர்ந்து, அதிஸுந்தரமான யக்ஷஸ்த்ரீயின் ரூபத்தைத்தரித்து ராமனைப்ரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து அவருடைய பரஸ்வரூபத்தை ஸ்தோத்ரஞ்செய்தாள். பிறகு அவருடைய உத்திரவால் உத்தமலோகங்களையடைந்தாள்,—அத்யாத்மம். 4.

96. 24. தண்டசக்ரம் காலசக்ரம் தர்மசக்ரம் விஷ்ணுசக்ரம் என்றவை அஸ்த்ரங்கள்—திலகம்.

30. சிவனுடைய சூலாயுதம்—திலகம். மோதகி சிகரியென்றவை கதைகளென்ற பெயரையுடைய அஸ்த்ரங்கள்—திலகம்.

97. 4. இரண்டு இடிகளும் அஸ்த்ரங்கள்—திலகம்.

7. அக்னிதேவதைக்கு ப்ரியமான சிகரமென்ற அஸ்த்ரம்—திலகம்.

9. வாயுதேவதைக்கு ப்ரியமான ப்ரதனுஸ்த்ரம்—திலகம்.

24. கந்தர்வர்களுக்கு ப்ரியமான மானவம் ப்ரஸ்வாபனம் ப்ரசமனமென்ற அஸ்த்ரங்கள்—திலகம்.

26. ப்ரஸ்வாபனம்:—சத்ருக்களைத் தூங்கும்படிசெய்வது. ப்ரசமனம்: அவர்களுடைய கோபத்தைத்தணிப்பது. தர்ப்பணம்: அவர்களைக் கொழுப்பேறும்படி செய்வது சோஷணம்: அவர்களுடைய தேஹத்திலுள்ள ரஸங்களை வற்றச்செய்வது. ஸந்தாபனம்: தேஹத்தில் எரிச்சலுண்டாக்குவது. விலாபனம்: அழும்படிசெய்வது.

3. மன்மதனுக்கு ப்ரியமான மதனுஸ்த்ரம்—திலகம்.

9. மோஹனமென்ற பிசாசங்களின் அஸ்த்ரம்—திலகம்.

23. சிசிரமென்ற ஸோமதேவதையின் அஸ்த்ரம்—திலகம்.

27. இது பகனென்ற தேவதையின் அஸ்த்ரம்—திலகம்.

98. 2. கோடேத்தார். விச்வாமித்ரர் ஸித்தாச்ரமத்திற்கு வந்தபிறகு ஸகல அஸ்த்ரசஸ்த்ரங்களையும் ராமனுக்கு உபதேசித்தார்.—துளஸிதாஸ். ரா. பாலகாண்டம்.

4. ஸந்தோஷத்துடன்:—அஸ்த்ரதேவதைகள் தங்களுக்கு அதிதைவமான ராமனிடத்தில் சேரும் பாக்யத்தைப் பெற்றதால் ஆனந்தமடைந்தன—திலகம்.

20. ஸம்ஹாரம்:—ஓர் அஸ்த்ரத்தின் மூலமந்த்ரத்தில் அதின் உபஸம்ஹாரமந்த்ரமும் அடங்கியிருக்கும்.

26. ஸத்யவான் முதலியவை உபஸம்ஹாரதேவதைகளின் பெயர்கள்—கோவிந்தராஜீயம்.

ராமன் கேட்டபடி உபஸம்ஹாரங்களையுபதேசித்து ஸத்யவானென்ற இதர அஸ்த்ரங்களையும் அநுக்ரஹித்தார்.

29. தசாக்ஷப்முதல் ஜ்யோதிஷம்வரையில் கோவிந்தராஜீய பாடத்திலில்லை; தேவநாகரிலிபியில் கும்பகோணத்தில் அச்சிடப்பட்ட ப்ரதியிலிருக்கின்றன.

99. 9. யோகந்தரம்:—இவ்விடத்தில் சுசிர்பாஹு மஹாபாஹு கிஷ்குஸி விருசியென்ற பாடமுமுண்டு.

100. 13. ஸித்தாச்ரமத்தில் பகவான் எப்பொழுதும் விளங்குவதால் அங்கே செய்யும் தபஸெல்லாம் ஸித்தியாகுமென்பதையும், பகவானுடைய திவ்யக்ஷேத்ரத்திலேயே வஸிக்கவேண்டுமென்பதையும் இந்த ஸர்க்கத்தில் உபதேசிக்கிறார்.

23. ஸித்தாச்ரமம்:—ஸித்தாச்ரமத்திற்குத் தாருவனமென்றும் பதரிகாச்ரமமென்றும் பெயருண்டு. அங்கே விஷ்ணு நரநாராயணரிஷிகளின் ரூபத்துடன் தபஸ்செய்தார்.—கம்பராமாயணம்.

முதலில் மஹாவிஷ்ணு தன் ஸ்வரூபத்துடன் அங்கே தபஸ்செய்தார் பிறகு வாமனரூபியாய் அவ்விடத்தில் தபஸ் செய்தார். ஆகையால் அந்த ஆச்ரமம் விசேஷமஹிமையுள்ளது. பதரிகாச்ரமத்தில் நாராயணரிஷியின் ரூபத்துடன் எப்பொழுதும் தபஸ்செய்துகொண்டிருப்பதைப்போல், லோகத்தில் தபஸைப் பரவச்செய்வதற்காக ஸித்தாச்ரமத்தில் தபஸ்செய்துகொண்டிருந்தார்.

100—25. பலி : ப்ரஹ்லாதனுக்குப் பேரனும் விரோசனனுக்குப் புத்ரனுமான பலியென்பவன் ஒருக்கால் இந்த்ரனால் ஜயிக்கப்பட்டான். அவனுடைய குருவான சுக்ராசார்யர் அவனை விச்வஜித்தென்ற யாகத்தைச் செய்யும்படி கட்டளையிட்டார். அதில் பூர்ணாஹுதிகொடுக்கப்பட்டவுடன் அக்னிகுண்டத்திலிருந்து ஒரு ரதமும், பச்சைவர்ணமுள்ள குதிரைகளும், ஸிம்ஹக்கொடியும், தங்கமயமான வில்லும், குறையாத இரண்டு அம்பறைகளும், ஒரு திவ்யகவசமும் உண்டாயின. ப்ரஹ்லாதன் ஒரு மாலையையும் சுக்ராசார்யர் ஒரு சங்கத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள். இவைகளுடன் பலி இந்த்ரனை எதிர்த்தான். அப்பொழுது ப்ருஹஸ்பதி தேவர்களைப்பார்த்து, "உங்களுக்கு இது ஜயகாலமல்ல; விஷ்ணுவின் ஸஹாயமில்லாமல் நீங்கள் அஸுரர்களை வெல்லமுடியாது. ஆகையால் உங்களுக்கு நல்லகாலம் வரும் வரையில் எங்கேயாவது ஒளிந்திருங்களெ"ன்றார் அப்படியே தேவர்கள் செய்யப் பலி த்ரிலோகாதிபதியானான்.

சுக்ராசாரியர் பலியை நூறு அச்வமேதயாகங்களைச் செய்யும்படி கட்டளையிட்டார். அதிதி தன் புத்ரர்களான தேவர்கள் அபஜயமடைந்ததைக்கண்டு வருத்தமுற்றுத் தன் பர்த்தாவான காச்யபரை ப்ரார்த்திக்க, அவர், "விஷ்ணுவை உத்தேசித்து நீ பயோவ்ரதத்தை அனுஷ்டிக்கக்கடவாயெ"ன்றார். அவளும் அப்படியே பன்னிரண்டு தினங்கள் அந்த வ்ரதத்தையனுஷ்டிக்க, விஷ்ணு ப்ரத்யக்ஷராய், "உனக்குப் புத்ரனாய் அவதரிக்கிறேனெ"ன்று அனுக்ரஹித்தார்.

பகவான் லோகரக்ஷணார்த்தமாய்க் காச்யபருக்கும் அதிதிக்கும் புத்ரனாய் அவதரித்து வாமனனென்ற திருநாமத்துடன் வளர்ந்துவந்தார். சிலகாலத்திற்குப் பிறகு பலி நர்மதாநதிக்கரையில் அசவமேதயாகம் செய்வதாய்க் கேள்விப்பட்டு அங்கே சென்றார். பலி அவரை அர்க்யபாத்யங்களால் பூஜித்து, "ஸ்வாமி! தங்களுடைய வரவால் நான் க்ருதார்த்தனானேன். என்னிடத்திலுள்ள யாவற்றையும் தங்களுக்கு அர்ப்பணம் செய்தேன். அபேக்ஷித்ததை எடுத்துக்கொள்ளவேண்டுமெ"ன்று ப்ரார்த்தித்தான். வாமனமூர்த்தி, "அப்பா! எனக்கு என் காலடியால் மூன்றடி பூமி தருவாயா?"வென்றார். பலி சிரித்து, "ப்ராஹ்மணோத்தம! இதென்ன? என்னிடத்தில் இந்த அல்பவிஷயத்தை யாசிப்பதற்காக

ஸா தாங்கள் இவ்வளவு ச்ரமமெடுத்துக்கொண்டீர்கள்? இன்னும் ஏராளமாய்ப் பூமியைப் பெற்றுக்கொள்ளுங்க"ளென்றான். வாமனர், "வேண்டாம். எனக்கு இவ்வளவே போதும். ப்ராஹ்மணன் சிறிய பதார்த்தங்களை யாசிக்கவேண்டியதேயொழிய ஆசைக்கு இடங்கொடுக்கக்கூடா"தென்றார். பலி மறுபடியும் சிரித்துத், "தங்களிஷ்டப்படியே நடக்கட்டும்; இதோ கொடுத்தேன். பெற்றுக்கொள்ளுங்க"ளென்று தீர்த்த பாத்ரத்தையெடுத்து வாமனருடைய கையில் தாரைவார்க்கப் போகும்பொழுது, சுக்ராசார்யர் மறித்து, "இப்படிச் செய்யாதே. உனக்கு மிகுந்த கெடுதியுண்டாகும். இந்தக் குள்ளன் ப்ராஹ்மணனென்றெண்ணாதே. ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே. ஓரடியால் பூலோகத்தையும் புவர்லோகத்தையும் இரண்டாவது அடியால் ஸுவர்லோகத்தையும் அளப்பார். மூன்றாவது அடிக்கு இடமெங்கே நீ சொன்ன வார்த்தை தவறின பாபத்திற்குட்பட்டு நரகத்திற்குப் போவாய். மேலும் உனக்குள்ள யாவற்றையும் கொடுத்துவிட்டு எங்கே போவாய்? ஆகையால் இப்படிச் செய்யாதே. ஸத்யந்தவறாமலிருப்பது உத்தமமே. ஆனால் கஷ்டம் நேரும்பொழுது ஸத்யம் தவறலாமென்று வேதம் இடங்கொடுக்கிற"தென்றார். பலி, "ஆசார்யரே! ப்ரஹ்லாதனுக்குப் பேரனாய்ப் பிறந்து, நான் பொய்சொலவேணு? இந்த ப்ராஹ்மணப்பையனுக்கு நான் சொன்னபடி கொடுக்காமலிருக்க மாட்டேன். இவன் விஷ்ணுவாயிருந்தாலென்ன? என் சத்ருவாயிருந்தாலென்ன?"வென்றான். சுக்ராசார்யர், "அடே! உன் குருவின் ஆக்ஞையை நீ மீறினபடியால் நீ யாவற்றையும் இழக்கக் கடவதெ"ன்று சபித்தார். பலி சற்றுங்கலங்காமல் வாமனமூர்த்தியை விதிப்படி பூஜித்து தானமந்த்ரத்தை உச்சரித்தான். அவனுடைய தர்மபத்னியான விந்த்யாவலி தங்கப்பாத்ரத்தில் தீர்த்தத்தைக் கொண்டுவந்து வைத்தாள். பலி வாமனருடைய பாதங்களைக் கழுவி, அந்த ஜலத்தைத் தன் சிரஸில் ப்ரோக்ஷணஞ்செய்து கொண்டான்.

பிறகு வாமனமூர்த்தி தன் விச்வரூபத்தையெடுத்து, பூலோக புவர்லோகங்களை ஓரடியாலும், ஸுவர்லோக மஹர்லோக ஜனலோக தபோலோக ஸத்யலோகங்களை இரண்டாவதடியாலும் அளந்து, ப்ரஹ்மாண்டத்தைக் கால் கட்டைவிரல் நகத்தால் பிளந்தார். அதைக்கண்டு அஸுரர்கள், "ஐயோ! நமது மஹாராஜா மோசம்